இதழ் 198

# மண்

ஜேர்மனி / 2019

கார்த்திகை - மார்கழி / November - December

## Merry Christmas & a Happy New Year

வாசகர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நத்தார் - புதுவருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.







மண் சஞ்சிகை வெளியாகும் டியூஸ்பேர்க் நகரில் வசித்தவரான அமரர் சின்னத்தம்பி கிருஸ்ணகுமார் அவர்களின் 31வது நாள் நினைவு தினம் 04.10.19 ஆகும். அன்றையதினம் அன்னாரின் மனைவி, பிள்ளைகளின் நிதி உதவியால் மன்னாரிலுள்ள முதியோர் இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# எங்கள் கருத்து...

இந்நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக இம்மாதம் (நவம்பர்) 16ஆம் திகதி நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெரும்பான்மை மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்டார். அந்த ஆணையின் அடிப்படையில் அவர் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இச்சத்தியப் பிரமாணத்தைத் தொடர்ந்து அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தமது வெற்றியில் தமிழ், முஸ்லிம் மக்கள் பங்காளர்களாக வேண்டும் என விஷேட அழைப்பு விடுத்திருந்தும் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் திருப்திகரமான அளவுக்கு வாக்களிக்கவில்லை. என்றாலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவென தமிழ், முஸ்லிம் மக்கள் தம்முடன் கைகோர்க்க வேண்டும்' எனப் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருக்கிறார்.

எனக்கு எதிராக வாக்களித்த மக்களுக்கும் நானே ஜனாதிபதியாவேன். அதனால் இன, மத பேதம் பாராது ஒவ்வொரு இலங்கையருக்கும் சேவையாற்றுவேன் என்றும் வெளிப்படையாக அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பும் அவர் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விடுத்திருக்கும் அழைப்பும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முதிர்ச்சியையும் அவர் நாட்டின் சுபீட்சம் முன்னேற்றத்தில் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

உண்மையாகவே நாட்டின் மீது பற்றுக் கொண்ட ஒருவரின் மனநிலை இவ்வாறுதான் இருக்கும். பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் எல்லா இன மத மக்களும் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்வது மிகவும் அவசியமானது. அவ்வாறு இன, மத, மொழி, பிரதேச, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படும் போதுதான் நாட்டை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

நாடு என்று வருகின்ற போது சிங்களவர், தமிழர், முஸ்லிம் உள்ளிட்ட எல்லா மக்களும் ஒரே பாணியில் பயணிப்பது நாட்டில் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாகும். இதை விடுத்து தனித்தனி இனக் குழக்களாக சிந்திப்பது ஒருபோதும் நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் உகந்ததாக அமையாது.

இந்நாடு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற விடயத்தில் இன, மத, மொழி, பிரதேச பேதங்களுக்கு அப்பால் எல்லா மக்களும் உடன்படக் கூடியவர்களாக உள்ளனர். ஏனெனில் நாடு முன்னேற்றமடையும் போதுதான் மக்கள் சுபீட்சமானதும் வளமானதுமான வசதி வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வர். நாட்டின் சுபீட்சத்தினதும் முன்னேற்றத்தினதும் முக்கியத்துவத்தையும் அதன் தேவையையும் உணர்ந்து கொண்டுள்ள ஒவ்வொருவரும் இலங்கையர் என்ற அடையாளத்துடன் நிச்சயம் ஒன்றுபட்டு செயற்படுவர்.

அந்த வகையில் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் நோக்கி ஜனாதிபதி விடுத்திருக்கும் இவ்வழைப்பை சாதாரணமானதாக நோக்க முடியாது. இந்த அழைப்பானது தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்கிறது. அதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் இவ்வழைப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். இதன் நிமித்தம் தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதியுடன் கைகோர்த்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

இந்த மண்ணில் வாழும் எல்லா மக்களும் ஒன்றுபட்டுத்தான் இத்தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இதன் தேவை பரவலாகவே உணரப்பட்டுள்ளது. அதனால் தமிழ் ,முஸ்லிம் மக்கள் இதனை உணர்ந்து செயற்படுவது மிக அவசியமான விடயமாகும். இதேவேளை பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, 'ஜனாதிபதியின் அழைப்பின் அடிப்படையில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த முன்வர வேண்டும்' என கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

ஆகவே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காகவும், சுபீட்சம் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் பேதங்களுக்கு அப்பால் ஜனாதிபதி தலைமையின் கீழ் சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும். இல்லையேல் மீண்டும் பழையகதையாகத்தான் முடியும். ஆகவே இன்றைய யதார்த்த நிலமைகளைக் கருத்திற்கொண்டு சகல இன மக்களும் ஐக்கியத்துடன் செயற்பட்டால்தான் நல்ல முடிவுகளை எட்டலாம்!...

-ஆசிரியர்-

# ஆத்திசூடி விளக்கம்!...




## மிகைபடச் சொல்லேல்...

அளவைப்பற்றி உங்களுக்கு நிறையத் தெரியும். தெரிந்திருக்க வேண்டும். "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்றொரு பழமொழி"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்" என்று இன்னொரு முதுமொழி எதிலுமே அளவு இருக்குமானால் அது பாராட்டுப்பெறும். பேச்சிலும் இந்த அளவு முக்கியம். அளவோடு பேசுபவனே அறிவாளி'. "அழுத்தக்காரன்" என்று பிறர் பட்டம் சூட்டினாலும் பரவாயில்லை. தெரிவிப்பதை அளவோடு தெரிவியுங்கள். சொல்ல வேண்டிய சொற்களுக்கு மேல் அதிகமாக எதையும் சொல்லக்கூடாது. அதிகமான பேச்சு கேட்பவருக்கு வெறுப்பை உண்டாக்கும். அத்தகைய பேச்சுக்கு மதிப்பு இருக்காது. ஆகவே நீங்கள் எதைப்பற்றிப் பேசினாலும், அளவோடு பேசுங்கள். அதிகமாய்ப் பேசாதீர்கள் என்கிறார் ஔவைப்பாட்டி!..

## மீதூண் விரும்பேல்...

உடல் பலத்துக்காகத்தான் சாப்பிடுகிறோம். ஆரோக்கியத்துக்கும், சீரான வளர்ச்சிக்கும் ஏற்ப சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட வேளைகளில் உண்ண வேண்டும். இங்கும் அளவை நினைவில் வேண்டும். பேச்சை அளந்து பேசுவது எப்படி முக்கியமோ அதேபோல உணவையும் அளவோடு உண்ணவேண்டும். நாக்கின் சுவைக்கு அடிமையாகி', அளவுக்குமீறிச் சாப்பிடக்கூடாது. நம் பெரியவர்கள் "நாக்கைக் கட்டுப்படுத்து" என்றுகூறுவார்கள். கட்டுப்பாடின்றி அளவுக்கு மீறிச் சாப்பிட்டால் உடல் பருமனாகும். சுறுசுறுப்பும் போய் சோம்பேறித்தனம் ஏற்படும். பல நோய்களினால் உடல்நலக்குறைவு ஏற்படும். இதனால் பல தோல்லைகள் துயரங்கள் வந்துசேரும். இதற்காகவே ஔவைப்பாட்டி அளவோடு உண் என்கிறார்.

## வாக்குண்டாம்..... (மூதுரை) (தொடர்ச்சி)

கான மயில்ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் -தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதவன் கற்ற கவி.

காட்டிலே ஒரு மயில் ஆடியது. மிக அழகாய் இருந்தது. வான்கோழி ஒன்று அதைக்கண்டது. கண்ட உடனே அதற்கும் ஆசை உண்டாயிற்று. என்ன அசை?..உடனே தன் சிறகை விரித்தது. ஆடியது அது என்ன அழகாய் இருக்குமா?.. ஒருநாளும் இராது. நன்றாகப் படித்து அறிந்தவன் பேசுகின்ற பேச்சுக்கும், ஏதோ இரண்டொரு கருத்துக்களை மாத்திரம் தெரிந்துகொண்டவன் பேசும் பேச்சுக்கும் உள்ள வித்தியாசம் இப்படிப்பட்டதே. கல்லாதவன் கற்றவனைப் போல நடிக்கலாம். நடித்தாலும் அது அழகு தராது. கல்வியின்மை வெளிப்பட்டுவிடும்.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்குஅறியா
புல்அறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம்.

நஞ்சு வைத்தியன் ஒருவன் எப்பேர்ப்பட்ட நஞ்சுக்கடிகளையும் தீர்த்துவிடுவான். ஒருநாள் அவன் காட்டு வழியே போய்க்கொண்டிருந்தான். வழியிலே புலி ஒன்றைக் கண்டான். புலி எப்படி இருந்தது?..குற்றுயிராக இருந்தது ஏன்?.. பாம்பு கடித்ததால். அவனுக்கு இரக்கம் தோன்றியது. "ஐயோ பாவம் இந்தப் புலி" நச்சுக்கடியால் வருந்துகிறதே என்று கலங்கினான். புலிக்கு வைத்தியம் செய்தான். நஞ்சை இறக்கினான். குணமாறிற்று. உடனே என்னாயிற்று?.. புலி எழுந்து நின்று உறுமியது. அதற்குப் பசி இருந்தபடியால் எதிரே நின்ற வைத்தியனைக் கொன்று தின்றது. "இவன் எனது நச்சுக்கடி போக்கியவன் என்று எண்ணியதா புலி?..இல்லை. எனவே அற்பர்களுக்கு உதவி செய்யக்கூடாது. செய்தால் என்ன கிடைக்கும்?..அதுதான். உதவி செய்யும் போது யோசித்துச் செய்ய வேண்டும். கண்டவருக்கெல்லாம் உதவலாகாது. பிறகு அது நமக்கே ஆபத்தாகிவிடும்.

# விடாமுயற்சி என்றும் வெற்றிதரும்......

முன்னொரு காலத்தில் சோலையூர் என்னும் அழகிய கிராமம் இருந்தது. அக்கிராமத்தில் ஒரு சிறிய பாடசாலை இருந்தது. அப்பாடசாலையில் சிவா, பவான் ஆகிய இரு நண்பர்கள் இருந்தனர். சிவா மிகவும் கெட்டிக்காரன். பவான் சோம்பேறித்தனம் கொண்டவன். அவனுக்குப் படிப்பதில் ஆர்வம் இல்லை. சிவா நண்பன் பவானுக்குக் கற்றல் செயற்பாடுகளில் உதவி செய்வான். ஆனால் பவான் அதனை பொருட்படுத்தாது தனது காலத்தைக் கடத்தி வந்தான்.

ஒருநாள் ஆசிரியரிடம் அடிவேண்டி அழதுகொண்டே வீதியால் வந்தான். அப்போது பவான் சிந்திக்க வைக்கும் ஒரு காட்சியைக் கண்டு அதிசயத்துப் போனான். ஒரு தாய்ப்பூனை தனது நான்கு குட்டிகளையும் மதில் மேல் ஏற்றி கூரையின் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டுசெல்ல முயற்சித்துக்கொண்டிருந்தது. தாய்ப்பூனை மதில்மேல் ஏறி அவ்வழியே சென்று "தனது குட்டிகளுக்குப் பாதுகாப்பான இடமா" என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு கீழே வந்தது. தனது முதலாவது குட்டியைத் தூக்கிச் செல்ல மிகவும் சிரமப்பட்டது. பலமுறை தோல்வியைத் தழுவியது. எனினும் விடாமுயற்சி செய்து மிக..மிகச் சிரமப்பட்டுத் தூக்கிச் சென்றது. பின்பு இரண்டாவது குட்டியையும் அவ்வாறே தூக்கிச் சென்றது. மூன்றாவது குட்டியை இலகுவாகத் தூக்கிச் சென்றது. இறுதியாக நான்காவது குட்டியை மிக..மிக இலகுவாக தூக்கிச் சென்றது. அதைப்பார்த்த பவான் வெட்கித் தலைகுனிந்தான்.

அப்போது சிவா பவானைப் பார்த்து "தலை குனியாதே நிமிர்ந்து நில்" அப்பூனையைப் போலவே உனது வெற்றிக்கான பாதையையும் அதன் தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள், பின்பு மிக.. மிக சிரமப்பட்டு உனது சோம்பேறித்தனத்தை விரட்டிவிடு. மிகச்சிரமப்பட்டு சுறு சுறுப்பாக இருக்கக் கற்றுக்கொள், பின்பு நற்பழக்கவழக்கங்களை உன்னுள் ஏற்படுத்திக் கொண்டால் மிக இலகுவாக வெற்றியை அடைந்து கொள்வாய் என அறிவுரை கூறினான்.

அன்றிலிருந்து பவான் சோம்பேறித்தனத்தைத் துரத்திவிட்டு சுறுசுறுப்பாகத் தனது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தான்.

அனைத்துச் செயற்பாடுகளையும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் செய்தான். மிகவும் விடாமுயற்சி செய்து படித்தான். பவான் முன்னர் அடிவாங்கும்போது சிரித்த மாணவர்கள், தற்போது ஆசிரியர்களால் பாராட்டும்போது கைதட்டிப் பாராட்டினார்கள். அவன் சாதரணதரப் பரீட்சை, உயர்தரப்பரீட்சை போன்றவற்றில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று வைத்தியராகச் சித்திபெற்றான். தனது வைத்திய சேவையைச் சோலையூரிலேயே செய்தான்.

பவான் வெற்றி என்னும் மாளிகையில் தனக்கென ஒரு அறையை நிரந்தரமாக்கிக் கொண்டான். ஆகவே மாணவர்களாகிய நாமும் வெற்றி என்னும் கயிற்றைப் பற்றிக்கொள்ள விடாமுயற்சி செய்து இலக்கை அடைந்து கொள்வோமாக!...

செல்வி செ துளசிகா
ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம்
திருகோணமலை

## அழகான வரிகள் பத்து...

01-அறிமுகம் இல்லாதவர்களின் பார்வையில்.. நாம் எல்லோரும் சாதாரண மனிதர்கள்.

02-பொறாமைக்காரரின் பார்வையில்.. நாம் அனைவரும் அகந்தையாளர்கள்.

03-நம்மைப் புரிந்து கொண்டோரின் பார்வையில்.. நாம் அற்புதமானவர்கள்.

04-நேசிப்போரின் பார்வையில்.. நாம் தனிச் சிறப்பானவர்கள்

05-காழ்ப்புனர்ச்சி கொண்டவர்களின் பார்வையில்.. நாம் கெட்டவர்கள்.

06-சுயநலவாதிகளின் பார்வையில் நாம்...ஒழிக்கப்பட வேண்டியவர்கள்.

07-சந்தர்ப்பவாதிகளின் பார்வையில் நாம் ஏமாளிகள்.

08-எதையும் புரிந்து கொள்ளாதவர்கள் பார்வையில் நாம் குழப்பவாதிகள்.

09-கோழைகளின் பார்வையில் நாம் அவசரக்குடுக்கைகள்.

10-பிறருக்கு உதவாதோர் பார்வையில் நாம் சுயநலக்காரர்கள்.

# ஆங்கில மொழியின் மகத்துவம்....

இலங்கை ஒரு சுதந்திர நாடு. இலங்கையில் பல்லின மக்கள்வாழ்கின்றனர். இங்கு பெரும்பாலும் சிங்களம், தமிழ் மொழிகளே பேசப்படுகின்றன. மொழியானது அம்மொழியைப் பேசும் இனத்தின் அடையாளம் எனப்படுகின்றது. எனவே எம் தாய் மொழியை பேணிக்காக்க வேண்டும். ஒருவர் பிறமொழியில் கொள்ளும் ஆர்வமும் மொழி ஆற்றலும் அவரது இன அடையாளத்தைப் பாதிக்கக்கூடாது.

இச்சிந்தனையின் அடிப்படையில்தான் நாம் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆங்கிலம் அங்கீகாரம் பெற்ற சர்வதேச மொழியாகும். ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் இம்மொழியின் செல்வாக்கு அளப்பரியது. ஆங்கிலேயருக்கு அடிமைப்படாத நாடுகளிலும்கூட இன்று ஆங்கிலம் சர்வதேச தொடர்பு மொழியாக விளங்குகின்றது.

ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு, பொருளாதாரம், கல்வி விருத்தி, விஞ்ஞான ஆய்வு போன்ற காரணங்களால் ஆங்கிலம் சர்வதேச மொழியாக விளங்குகின்றது. ஆங்கிலக் கல்விக்கு இலங்கையில் தொடர்ந்தும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கல்விகற்ற இலங்கைவாழ் பிரசைகளில் அநேகமானோர் ஆங்கில மொழி அறிவு மிகுந்தவர்களாக இருந்தனர். இந்நிலை இன்றும் தொடர்கின்றது. இலங்கை கல்வி அமைச்சினால் ஆங்கில மொழியின் அவசியம் உணரப்பட்டு இரண்டாம் மொழியாக அனைத்துப் பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுகின்றது.

இன்று நாம் கணினி யுகத்தில் வாழ்கின்றோம். ஆங்கிலம் கணினி பயன்பாட்டிற்கான மொழியாக அமுலாகின்றது. இணையத்தளத்தில் தேடல்களுக்காக ஆங்கிலம் முக்கியம் பெறுவதை நாம் உணரவேண்டும். இன்று மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல், தொழில்நுட்பம் என்பவற்றை ஆங்கில மொழி மூலம் கற்றுத்தேற வேண்டியிருக்கிறது. உலகத்தோடு தொடர்பு கொண்டு உலகை அறிவதற்கு உலக மொழியாகிய ஆங்கிலத்தை நாம் கற்கவேண்டும்.

தாய்மொழி ஆற்றல் மூலம் தனித்துவத்தைப் பேணுவதோடு, ஆங்கில மொழியையும் கற்று அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை எம்மால் உணரமுடியும். ஆங்கிலத்தின் அழகை நாம் ரசிக்க வேண்டும். ஆங்கில மொழியைக் கற்பதன் மூலம் தமிழ்மொழியை மேலும் மெருகூட்டி வளம்படுத்த முடியும். பொதுவாகத் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் ஆற்றல் உடையோர் தம் வாழ்வில் பிரகாசித்திருக்கின்றார்கள். இருமொழிப் புலமை ஒருவரது ஆற்றலையும் ஆளுமையையும் நிட்சயம் உணர்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

நாம் எம் தாய்மொழியான அருமையான தமிழ்மொழியை நேசிப்பதும், அதன் சிறப்பில் பெருமை கொள்வதும் அவசியம். இன்று வளர்ந்துவரும் உலக சமூக பண்பாடு, அரசியல், பொருளாதார நிலைகளுக்கேற்ப ஏனையவர்களுக்கு சமமாக நின்று எம்மை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். எனவே சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தைத் துணைமொழியாகக் கற்றுத் தேர்ச்சி பெறுவதில் தவறில்லை என்பதே உண்மையாகும்.

செல்வி ந துர்க்கா
ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம்
திருகோணமலை

## மண் சஞ்சிகையின்... 30 வது ஆண்டு நிறைவு விழாப் போட்டிகள்........

1990ம் ஆண்டு தைப்பொங்கல் அன்று ஆரம்பிக்கப்பட்ட உங்கள்"மண்" சஞ்சிகை 2020 தை மாதம் 30வது ஆண்டுகள் நிறைவு செய்கின்றது. இந்த ஆண்டுவிழாவையொட்டி புலம்பெயர்வாழ் தமிழ் பேசும், எழதும் வாசிக்கும் சிறுவர்கள், இளையோர்கள், மாணவமணிகளிடையே பல போட்டிகளை நடாத்தப்படுகின்றன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். போட்டிகள் பற்றிய விபரங்கள் இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ளன. விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. மேலதிகமாகத் தேவைப்படின் நிழல்பிரதிகள் எடுத்துக்கொள்ளலாம். அனைவரும் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றிடுங்கள்!..

# அன்னை மடியில்......

பத்துமாதம் என்னைக் கருவிலே சுமந்து
பக்குவமாய் பெற்றெடுத்த என் அன்னையே

தன் பசி மறந்து என் பசி தீர்க்க உன்
உதிரத்தையே பாலாகத் தந்த உத்தமி

நான் வெளிச்சத்தில் நடக்கவேண்டுமென
மெழுகுவர்த்தியாய் உருகினாயே அம்மா

அம்மா என்பது சொல் அல்ல
அன்புக் கடவுளின் மறு வடிவம்

ஆயிரம் பவுண்கொடுத்து பஞ்சுமெத்தை
வாங்கி உல்லாசமாய் உறங்கினாலும்

அன்னைமடியில் தலைவைத்து உறங்குவது
போல் ஆகிவிடுமா நீ நிழல்தரும் ஆலவிருட்சம்

இதயத்துடிப்பு நின்றாலும் என்றும் - என்
இதழ் சொல்லும் வார்த்தை ஆருயிர் "அம்மா"

தொப்பிள் கொடி அறுந்தாலும்
நம் பாசக்கொடி அறுந்து போகாது அம்மா!...

செல்வி பே அனுச்சா
ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம்
திருகோணமலை

பொன்மொழிகள்..

உலகில் பொன் நகையைவிட புன்னகைதான் விலை மதிக்க முடியாதது.

துன்பம் அனுபவித்த காலத்தை மறந்துவிடு, ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 18

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 9 | | | 8 |
| | 4 | 1 | 3 | | | | | |
| | | | 1 | 2 | 8 | | | |
| 9 | 2 | | | | | 5 | | 3 |
| | | 3 | | | | | | |
| 7 | | | | | 4 | 2 | | 6 |
| 5 | | | | | | | | |
| | | | | 4 | 5 | 7 | 6 | 9 |
| | | | | | 3 | 8 | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 109
## (கார்த்திகை-மார்கழி - 2019)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01–04 கிறிஸ்த்தவர்களின் கொண்டாட்டம்

09–10 பூக்கன்றுகள் வைத்துப் பாதுகாப்பது

13–14 நம் நாட்டு மரம் ஒன்று

வ – இ:

11–10 ஆண்களுக்கு மட்டும் இது உண்டு

16–14 இயற்கை அழிவைத் தருவது

கீ – மே:

11 –03 வீட்டில் ஒருவர்

16–04 நல்ல போதனை தந்த உத்தமர்

மே – கீ:

01– 05 ஒரு மிருகம்

06– 10 இந்தியப் பிரதமரை எல்லோரும் இப்படி அழைப்பர்

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள்...

# கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை....

நீண்ட காலமாக ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்ற ஏக்கத்தைவிட மற்றவர்கள் இழிவாகப் பேசுகிறார்களே என்ற கவலைதான் அவளுக்கு அதிகமாக இருந்தது. அவள் வாழ்ந்த ஊருக்குச் சற்றுத் தொலைவில் மிகவும் பிரசித்திபெற்ற அம்மன் கோவில் ஒன்று இருந்தது. அந்த அம்மன்கோவிலுக்குச் சென்று நோன்பு இருந்தால் குழந்தை பிறக்கும் என்று அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் கூறினர். அம்மனைத் தரிசித்துக் குழந்தைவரம் பெறுவதற்கு ஒருநாள் புறப்பட்டாள். போகும் வழியிலே கைக்குழந்தைக்காரியான ஒரு பெண் அவளுடன் சேர்ந்துகொண்டாள். இருவரும் உரையாடியபடியே நடந்து சென்றனர்.

வழியில் குழந்தை ஒன்று தாயின் புடவையில் மலம் கழித்துவிட்டது. அவள் தன்னுடன் வந்தவளிடம் தன் குழந்தையைக் கொடுத்து "அம்மா என் குழந்தையைக் கொஞ்சம் பிடித்துக்கொள் அருகில் இருக்கும் ஆற்றில் இறங்கி என் பிடவையைச் சுத்தம் செய்துகொள்கிறேன். பிறகு குழந்தையை வாங்கிக் கொள்கிறேன் " என்றாள். அவளுக்கு குழந்தை அப்போதிருந்தநிலையில் அருவருப்பை ஊட்டியது. குழந்தை கழித்த மலம் அதன் உடலெல்லாம் ஒட்டிக்கொண்டிருந்தது. " ஐய்யோ குழந்தை அசிங்கமாக இருக்கின்றது. நான் இதை எடுத்துக்கொள்ள மாட்டேன்" என அருவருப்புடன் முகத்தைச் சுளித்தவாறு கூறினாள். வேறு வழியில்லாமல் அத்தாய் குழந்தையை தரையில் அமர்த்திவிட்டு ஆற்றில் இறங்கிப் பிடவையைச் சுத்தம்செய்து கொண்டாள்.

பின்பு குழந்தையைத் தூக்கிக்கொண்டுசென்று ஆற்றுநீரில் சுத்தப்படுத்திக்கொண்டு வந்தாள். பின்பு இருவரும் உரையாடியவாறு தொடர்ந்து பயணம் செய்தனர். கோவில் நெருங்கியதும் கைக்குழந்தைக்காரி தன்வழியே போய்விட்டாள். குழந்தை இல்லாதவள் கோவிலுக்குச் சென்று அம்மனைப் பயபக்தியுடன் வழிபட்டு நோன்பு இருந்தாள். ஒரு வாரம் கோவிலிலே தங்கி நோன்பு எடுத்துக்கொண்டாள். ஏழாவது நாள் அவள் கோவிலில் உறங்கிக்கொண்டிருந்தபோது அம்மன் அவள் கனவிலே தோன்றினாள் "எதற்காக நீ இங்கே வந்திருக்கிறாய்" என்று அம்மன் கேட்டாள்.

"தாயே நெடு நாட்களாக எனக்குககுழந்தைப்பேறு இல்லை என்னைக் காண்பவர்கள் எல்லாம் ஏளனமாகப் பேசுகிறார்கள்.

அருள்கூர்ந்து எனக்குக் குழந்தைவரம் அளிக்கவேண்டும். என்று வேண்டிக்கொண்டாள். "பெண்ணே நீ குழந்தைவரம் கேட்டு விரும்புகிறாய் என்பதை முன்னதாகவே அறிந்த நான் எந்த அளவுக்குக் குழந்தையின் அருமையை நீ உணர்ந்திருக்கின்றாய் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இங்கே நடந்துவரும்போது ஒரு சோதனை வைத்தேன். உன்னுடன் நடந்து வந்த கைக்குழந்தைக்காரியை எனது சோதனைக்குப் பயன்படுத்தினேன். அவளுடைய குழந்தை அவள் புடவையில் மலம்கழித்தபோது, ஆற்றுநீரில் இறங்கி அலசிக்கொள்வதற்காகத் தன் கைக்குழந்தையைக் கொஞ்சநேரம் பார்த்துக்கொள்ளும்படி கூறினாள். நீயோ குழந்தையின் உடம்பெல்லாம் மலம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. என அருவருப்படைந்து குழந்தையை வாங்கிக்கொள்ள மறுத்தாய். "கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை" என்ற பழமொழிக்கு ஏற்ப ஒரு குழந்தையின் அருமை உனக்குத்தெரியவில்லை.

நாளை நீ ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால் அது மலம் கழித்தால் அதன் உடலில் மலம் ஒட்டிக்கொள்ளாதா?.. அப்போ நீ என்ன செய்வாய்?..நீ பெற்ற குழந்தையைக் கண்டே நீ அருவருப்படைவாய். அதைத் தொட்டுச் சுத்தப்படுத்த உன் மனம் இடந்தராது. இந்த நிலையில் நீ குழந்தைப்பேறு அடைவது உனக்கு நல்லதல்ல..அந்தக் குழந்தைக்கும் நல்லதல்ல. ஆகவே குழந்தையின் அருமை தெரியும் விதத்தில் உன் மனம் பக்குவப்பட்ட பிறகுதான் உனக்குக் குழந்தை பிறக்கும். நீ சென்றுவரலாம் என்று கூறிவிட்டு அம்மன் அந்தப்பெண்மணியின் கனவில் மறைந்துவிட்டாள். மிகவும் மனவேதனைப் பட்டவளாக அவள் ஊர் திரும்பினாள்!..

எனவே இக்கதையின் மூலம் துன்பப்படுவோருக்கு உதவவும், பிறருக்கு உதவும் பழக்கத்தை நாம் சிறுவயதிலிருந்து கற்றுத் தெரிந்து பழகிக்கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்து கொள்வோம்!..

செல்வி மௌசிகா மகேந்திரன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# நல்நெறியில்.......

## ஆத்திரத்தில், ஆபத்து அதிகம்.

(V.நந்தகுமார்)

ஆழமான சிந்தனைகள், அவசியமானதும் அவசரமானதும் கூட. ஆர்வத்துடன் அனைத்தையும் அறியும்போது, அதிக ஆற்றல்கள் பெறுகிறோம்.

ஆய்வுகள் அனுதினம் தேவை, அது ஆபத்துகக்ள் அணுகாமல் காப்பாற்றும்.

ஆபத்தான ஆலோசனைகளை அகற்றி, ஆக்கபூர்வமான செயல் திட்டங்கள் தேடு.

ஆற்றல்கள் அதிக சக்தியுள்ளது, கஷ்டத்தின் மத்தியிலும் அரிய சாதனை படைக்கும்.

ஆழ்ந்து ஆராய்ந்து, அவதானத்துடன் பயிலும் பாடங்கள், பெரும் பலனைக் குவிக்கும்.

ஆலோசனைகளை செவிசாய்க்காதவர்கள், ஆபத்திற்குள் சிக்கித் தவிக்கிறார்கள்.

ஆற்றல்மிக்க அறிவை வளர்ப்பவர்கள், வரலாற்றைப் படைக்கும் வல்லவர்களாகிறார்கள்.

ஆற்றில் இறங்குமுன், ஆழத்தை அறிந்துகொள், ஆபத்து அணுகாமல் தவிர்க்கலாம்.

ஆசைகளை அதிகரித்து அவதியுறும் மனிதன், விலங்கு நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

ஆசை நிறைந்த எச்சங்களால், அவா புகுந்து அதிருப்தி நிலையை அடைகிறோம்.

ஆசை உள்ளவரை அந்தரமும் தொந்தரவும், கூடவே வந்து குடியிருக்கும்.

ஆசையில் அலைபவர்களுக்கு, அமைதி அழிந்து ஆனந்தம் அறவே அற்றுப்போகிறது.

ஆசையும், நிராசையும் அவரவர் அறிவின் ஆற்றலுக்குள் அடங்குகிறது.

ஆசையைக் குறைத்துக் கொண்டால், ஆயுள் முழுவதும் ஆனந்தம் அமையும்.

ஆத்திரத்தில் அதிகம் சாதிக்க ஏலாது, அனுசரிப்பதில் அதிகமாய்ப் பெறலாம்.

ஆத்திரத்திற்கு அடிமையாகும்போது, ஆபத்துக்களும் அருகில் உட்காருகிறது.

## உலகநீதி...... (வேண்டாம்)

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வோரோடு இணங்க வேண்டாம்
போகாத இடம்தனில் போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.
நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்
நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

## நம்நீதி...... (வேண்டும்)

பெற்றோரை மதிக்கின்ற பண்பு வேண்டும்
கற்றோரின் அறிவுரைகளை கேட்டல் வேண்டும்
பல் கலைகளையும் தெளிவுறக் கற்றல் வேண்டும்
கருத்துக்களைத் துணிவாக உரைத்தல் வேண்டும்
துன்பம் வந்தாலும் துவளாமல் துணிய வேண்டும்
இன்பம் வந்தாலும் இனிய பேச்சுக்கள் பேசவேண்டும்
அடுத்தவர் பொருள் மேல் ஆசை அகல வேண்டும்
அல்லல்படுவோர் துயர் கண்டு உதவிட வேண்டும்
தீயோர் நட்பை தீயிட்டுக் கொழுத்திட வேண்டும்
தீந் தமிழை சுவையாய் நன்கு கற்றிட வேண்டும்
தொண்டு செய்து தோழனாய் பழகிட வேண்டும்
உண்டு வாழ முடியாதோர்க்கு உதவிட வேண்டும்!...

திருமதி இராஜேஸ்வரி சிவராசா

# குறளும் பொருளும்

அறிவுடைமை: –

421. அழிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

422. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு

423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

425. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

426. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

427. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

428. அஞ்சுவ தஞ்சாமை பேதமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

429. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

430. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

# குறளும் பொருளும் (உண்மை அறிவுடையனாதல்)

421. அறிவே அழிவு வராமல் காப்பாற்றும் ஆயுதம். பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பும் அறிவே ஆகும்.

422. மனம் போன போக்கில் விட்டுவிடாமல் தீய செயலை விலக்கி நல்ல செயலில் மனதைச் செலுத்துவது அறிவே ஆகும்.

423. எப்பொருளை யார்யார் சொல்லைக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையைக் காண்பதே அறிவு ஆகும்.

424. அரிய சொற்களைக் கேட்பவர் எளிமையாக அறிந்துகொள்ளும்படி சொல்லிப் பிறர் கூறும் நுட்பமான சொற்களை ஆராய்ந்து காண்பதறிவு.

425. உலக மக்களை நட்பாக்குவது மேலானது. அந்நட்புமுன் மகிழ்ந்து விரிதலும், பின் வருந்திக் குவிதலும் இல்லாத ஒரே நிலையாக இருப்பது அறிவு.

426. உலகம் எவ்வாறு நடக்கின்றதோ, அப்படியே தானும் அதனுடன் பொருந்தி நடப்பது அறிவுடமையாகும்.

427. பின்வரும் விளைவினை முன் அறிந்து கொள்பவர் அறிவுடையவர். அதனை அறிய முடியாதவர் அறிவற்றவர்.

428. அஞ்ச வேண்டுவனவாகிய பழி', பாவங்களுக்கு அஞ்சாமை, அறியாமையாகும். அவற்றிற்கு அஞ்சுவது அறிவுடைமை ஆகும்.

429. தனக்கு வரும் துன்பத்தை முன் அறிந்து, அது வராமல் தடுக்கும் அறிவுடையவருக்கு நடுக்கம் தரும் துன்பம் ஒன்றும் இல்லை.

430. அறிவுடையவர் செல்வம் அற்றவராயினும் எல்லாச் செல்வமும் பெற்றவரே ஆவர். அறிவற்றவர் எச் செல்வம் உடையவராயினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...




## தேவை....

புல் மேய்ந்துகொண்டிருந்தது மாடு. மரத்தில் இருந்த குருவிக்குஞ்சு தாயைக் கேட்டது..ஏனம்மா மாட்டுக்கு நம்மைப் போல சிறகு இல்லை?..தாய்க்குருவி சிரித்தது. "மாட்டுக்கு நம்மைப் போல சிறகு தேவையில்லை" என்றது தாய். தாய்க்குருவி சொன்னது..

"வானத்தில் புல் முளைத்தால் மாட்டுக்குச் சிறகு முளைக்கும்"

## நிறைவு....

நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக்கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது. "எனக்கு ஏன் மதிப்பில்லை?..நானும் ஒரு கல்தானே" என்று ஓலமிட்டது. தெருவில் கிடந்த கடப்பாரை கூறியது.. " ஏ குறுணி! காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்கத் தெருவில் கிடக்கிறாய்" ஆனால் இரத்தினக்கல் அப்படியா?.. நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியே தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது. அப்படி என்றால்?...என்று இழத்தது குறுணிக்கல். கடப்பாரை சொன்னது..

"நிறைவாகும் வரை மறைவாக இரு"

# அறிந்து கொள்வோம்.....

01-உலகில் 100 வயதைக்கடந்து அதிகமாக வாழ்வோர் நாடு யப்பான்
02-உலகில் செம்பு அதிகம் கிடைக்கும் நாடு சிலி
03-உலகிலே பெரிய தீவு கிறீன்லாந்து
04-உலகில் ஆறுகள் இல்லா நாடு சவுதிஅரேபியா
05-உலகில் 13.000 தீவுகளைக்கொண்ட நாடு இந்தோனிஷியா
06-உலகிலே அதிக ரெயில் நிலையங்கள் (8.000) உள்ளநாடு இந்தியா
07-உலகிலே ரயில்கள் இல்லாத நாடு ஆப்கானிஸ்தான்
08-உலகிலே வெளிநாட்டவர்கள் 70 வீதம் வசிக்கும் நாடு துபாய்
09-உலகிலே நிலப்பரப்பில் மிகப்பெரிய நாடு ரஸ்ஸியா
10- உலகில் மிக உயரமான பகுதியில் அமைந்துள்ள நாடு தீபெத்
11- உலகில் ரோபோக்கள் அதிகமுள்ள நாடு யப்பான்
12- உலகில் 76 வீதம் சீனர்களைக்கொண்ட நாடு சிங்கப்பூர்
13-உலகில் ஒருநாடு, ஒருகண்டம் என்றும் அழைப்பது அவுஸ்திரேலியா
14-உலகில் 2 தலைநகரங்களைக்கொண்ட நாடு தென்னாபிரிக்கா
15-உலகில் அதிக தொகை பணக்காரர்கள் வாழம்நாடு அமெரிக்கா

# உயிரினங்கள்.....

01-யானை, குதிரை நின்றவாறே தூங்கும்
02-எறும்புக்கு 6 கால்கள் உண்டு
03-அன்னம், கழுகு 100 ஆண்டுகள்வரை வாழம்
04-நுளம்பு ஒரு தடவை 300 முட்டைகள்வரை இடும்
05-ஆமை சுமார் 300 ஆண்டுகள்வரை வாழக்கூடியது
06-பாம்பின் உமிழ்நீர்தான் விஷமாக மாறுகின்றது.
07-வெள்ளாட்டுப் பாலில் கொழுப்பு அதிகம்
08-குதிரையின் முன்கால்கள் பின்கால்களைவிட மெலிந்தவை
09-ஆண் சிங்கம் உண்டு முடித்தபின்பே பெண் சிங்கம் உண்ணும்
10-நாய்க்கு முன்காலில் 5விரல்களும் பின்காலில் 4விரல்களும் உண்டு
11- சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் எடுக்கும்
12-பெங்குவின் ஒரு தடவை ஒரு முட்டைதான் இடும்
13-முட்டைகளில் பெரியது நெருப்புக் கோழி முட்டையாகும்.
14-மயிலுக்குப் பிடித்தமான இரை பாம்பு
15-குயில் குளிர் காலத்தில் கூவுவதில்லை

# குறுக்கெழுத்துப்போட்டி-172
## (கார்த்திகை - மார்கழி-2019)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01–04 உலக கிறிஸ்த்தவர்களின் பெருநாள்
10–13 பாம்பு இதன் ஒத்த சொல்
15–17 போரினால் அழியுண்ட வன்னி பெருநிலப்பகுதி
25–26 நன்மைக்கும் தீமைக்கும் பாவிக்கும் மங்கலப்பொருள்
29–32 கொடைக்குப் பெயர் போனவன்
41–42 ஊர்வன ஒன்று
47–49 இசைக்கருவி ஒன்று

வ-இ

07–04 நற்போதனைகளைத் தந்த பெருமான்
25–22 மாதங்களில் ஒன்று
33–32 அழகான மிருகம்
40–38 மார்கழியில் வந்த ஆழிப் பேரலைக்கு இன்னொரு பெயர்
47–43 பாரதியின் மனைவி இவர்.

கீ.மே

23–09 பெண்களில் ஒரு பருவம்
25–04 இனத்திற்காக உயிர் துறந்தவர்கள்
41–13 தொடக்கம் என்றும் கூறலாம்
43–22 இந்த மாதத்திலும் சில நாடுகளில் பனிப்பொழிவு இடம்பெறும்

மே-கீ

01–22 ஔவையார் அருளிய நூல்
05–19 தன் வாயினால் கெட்டழியும் உயிரினம்
07–35 இலங்கையின் கரையோர மாவட்டம் ஒன்று
23–44 ஆணவம் என்றும் கூறலாம்

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# நத்தார் தினவிழா

உலகம் முழவதும் பரந்துபட்டு வாழும் கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்படும் விழாக்களில் மிக முக்கியமான விழாவாக இந்த நத்தார் விழா விளங்குகின்றது. நத்தார் விழாவானது கிறிஸ்து பிறப்பு விழா, கிறிஸ்துமஸ் விழா எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் இவ்விழா யேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

மாநிலத்தை மீட்க வந்த மன்னவன் யேசு இம் மாநிலத்தில் பிறப்பதற்குச் சொந்த வீடு இல்லை, ஏழையிலும் ஏழையாகப் பலஸ்தீனம் என்னும் நாட்டில் பெத்தலகேம் நகரத்தில் ஒரு மாட்டுத் தொழுவமதில் மார்கழி மாதம் 25ம் திகதி பிறந்தார். இவரின் பிறப்பை தேவதைகள் மூலம் அறிந்து முதலில் மூன்று இடையர்களும்அதன் பின் மூன்று அரசர்களும் பார்ப்பதற்குச் சென்றனர்.

இப்பொழுது இந்த நத்தார் விழா பல்வேறு நாடுகளில், பல விதமாக, பல சமயத்தவர்களாலும் கொண்டாடப்படுகின்றது. மார்கழி மாதத்தில் ஆரம்பித்து வீடுகளிலும், பொது இடங்களிலும் நத்தார் மரங்களை வைத்து, மின் குமிழ்கள், அலங்காரப் பொருட்கள் போன்றவற்றால் அலங்கரிப்பார்கள். நத்தார் மரங்களின் கீழ் மார்கழி 24ம் திகதி இரவு கிறிஸ்தவ மக்கள் அன்பளிப்புக்களை வைப்பார்கள். மார்கழி 24, 25ம் திகதிகளில் கிறிஸ்தவ ஆலயங்களில் திருப்பலிப் பூசைகள் நடைபெறும். 25, 26ம் திகதிகளில் பரிசுப் பொருட்களைப் பரிமாறி, குடும்ப சந்திப்புக்கள், உணவுப் பரிமாற்றல்கள் போன்றவை நடைபெறும். எனவே இவ்விழா ஒரு முக்கிய குடும்ப விழாவாக உலக மக்களால் கொண்டாடப்படுகின்றது.

செல்வி சாமினா சிவதாசன்<br>எசன் - யேர்மனி

பொன்மொழி....

மனசு முழக்கச் சந்தோஷம் நிறைந்திருந்தால் கண்முன்னே தெரியும் அனைத்துமே அழகாகத் தோன்றும்.

# பணிந்தேற்றி வணங்குகிறோம்.

கார்த்திகைகள் கடந்துபோகும் கண்ணீரையும் சுமந்துபோகும்
காலங்கள் கடந்திடினும் கல்லறைகளைமென்மலர்கள் மூடும்
தூர்ந்துபோனஎம்மண்ணின் துயர்துடைத்துதுளிர்த்திடவைத்து
தோள்கொடுக்கஇன்றுஎவருமின்றிதுடிக்கிற தேளமதுள்ளம்
நேர்த்திக்கடன் கொடுத்தவாய் நின்னைநாம் அர்ப்பணித்துநின்று
நீளுகின்றகாலமெல்லாம் எம் நினைவுகளால் வணங்குகின்றோம்.!

கார்காலம் வந்தாலென்னகடுங்கோடைவெயில் சுட்டாலென்ன
காடுகளில் மறைந்தல்லவாகடுந்தவங்களை இயற்றினீர்கள்
ஊர்க்காவல் தெய்வங்களாய் உலாவந்துநின்றகாலங்களும்
உறங்கிடாதபொழுதுகளிலும் உயிர்த்தியாகங்களைசெய்தீரே
போர்த்தீயில் பொசுங்கிடினும் பிறந்தமண்ணினைமீட்டிடவே
புயலாகப்புறப்பட்டஉமைநாம் போற்றிநிதம் வணங்குகின்றோம்.!

வார்த்தைகளுக்குள் அடங்கிடாதுவற்றிப்போனதேளம்வாழ்வு
வானம்முட்டும் வேதனையுள்ளும் வணங்கிடத் தவறிடோமே
நார்களால் தொடுத்தசரத்தினில் நறுமலர்க்கதம்பமாகிய
நாளையவிடுதலையின் நாயகநாயகியராய் வீற்றிருப்போரே
பார்போற்றும் மறவர்களாய்ப்பரணிபாடிபடைத்தவாகையினை
பாராயணம் செய்துநிதம்உமைப்பணிந்தேவணங்குகின்றோம்.!

மார்பென்றும் தோளென்றும் மடிமீதும் உம்மைஅழகுபார்த்தோம்
மாவீரர்களாய் ஆனபின்பேமறவர்களாய் மண்ணுலகுபார்க்கிறது
வேர்களாம் எம்மினத்தின் விழதுான்றிடத்தானேவிதையானீர்கள்
வியனுலகுவியக்கும் வண்ணம் மண்ணின்விடுதலைவீரரானீர்கள்
தேர்க்காலாய் உமைச்சுமந்துதெய்வங்களாய்த் தொழுகின்றோம்
தேசத்தின் புதல்வர்களாகவேஉலகதேசமெல்லாம் வணங்குகின்றோம்.!

--அம்பலவன்புவனேந்திரன்..




காலங்கள் கரைத்திடாதகன்னித்தமிழில் தனிவியப்பு
கடல்கடந்துசென்றாலும் காதல்-கவியேஅரவணைப்பு
கோலங்கள் மாறிடுனும்குவலயத்தில் மொழிவிதைப்பு
குவிந்தஅகவைதொண்ணூறிலும் குதூகலமாயிணைப்பு

பாலமாய் இலக்கியத்தில் பங்களிக்கும்துடிதுடிப்பு
பாக்களாய் நாடகமாய் பல்வகையில் நூற்ப்படைப்பு
ஜாலங்கள் புதைந்தகவியெளவனத்துக்குஅர்ப்ணிப்பு
யாரிந்தஅம்பியென்று ஜாதகங்களேபெரும் வியப்பு

நீலங்கள் புதைந்தகடலின் நீளங்களானபயணிப்பு
நித்திலத்தில் பல்துறைகளில் நீந்தியேமுக்குளிப்பு
சீலங்கள் சொல்லும் கவி-அம்பியென்றேஉச்சரிப்பு
சீரோடுநீடுவாழ்கவெனசீதளமாய் மண்ணின்வாழ்த்து..!

ஓலங்கள் ஓய்ந்திடாதஉறவுகளின் விழியுதிர்ப்பு
உற்றவரும் உறவினரும் உயிர்வாழப் பிரார்த்திப்பு
காலங்கள் கனியுமென்றுகரையினிலேகண்விழிப்பு
கருனையுள்ளம்பொழியுமென்றுகடைசிவரைகாத்திருப்பு..

--அம்பலவன்புவனேந்திரன்..

## படிக்கல்லு...

- கவி மீனா-

பொன்னிறமாய்உதிக்கும்சூரியனும்
உலக நடப்பை பார்த்ததிலே
செந்தணலாய்
அந்தியிலே சாய்கின்றான்
வாழ்க்கைப் பாதையிலே
நடந்து போகப் போக
எமக்கும் உண்மைகள்புரிகிறது
இதயமும் விம்மி வெடித்து
செந் தீயால் வேகிறது
எம்மை சுற்றி வரும்
உறவுகளில் ஒரு சிலரே
சொந்தத்தை நிலைக்க
வைக்கச் சாட்சியாய்
மனச்சாட்சியோடு வாழ்கிறது
ஒரு முறை ஏனும் பார்ப்போமா
என நெஞ்சம் ஏங்கித் தவித்த
மனிதர்களைக் கூட
கண்களில் காண்பதே
பாவம் என மனசு
வெறுக்கும் நேரம் இதயம்
வெடிக்கும் ஓசை
உள்ளுக்குள்ளே அலையின்
குமுறலாய் அடிக்கிறது
மனித வாழ்க்கை ஓடையிலே
படிப்பினை ஒவ்வொன்றும்
நாம் ஏறும் படிகல்லாய்
வடிவமைத்து செல்கிறது
பாதையிலே கால்களுக்கு
படி கல்லும் இதயத்திலே
துன்பங்களைப் புதைக்க
புதை குழியுமாய்காலத்தோடு
வேகமாய் நமது
காலமும் போகிறது!....

## எல்லாம் யேசுவே....

-வல்வை நந்தகுமார்-

வாழ்கின்ற தெய்வம் இயேசு
வாழவைக்கும் தெய்வம் இயேசு

வல்லமையுள்ளவர் இயேசு
வழிகாட்டும் தெய்வம் இயேசு

அதிபதியானவர் இயேசு
அற்புதங்கள் புரிவபர் இயேசு

பரிசுத்தமானவர் இயேசு
பாதுகாப்புத் தருபவர் இயேசு

வாழ்விக்க வருபவர் இயேசு
வசந்தம் தருபவர் இயேசு

மன்னிப்புத் தருபவர் இயேசு
மகிமை தருபவர் இயேசு

நோய்களை எடுப்பவர் இயேசு
நின்மதி தருபவர் இயேசு

இரக்கமுள்ளவர் இயேசு
இன்பம் தருபவர் இயேசு

எமக்காக மரித்தவர் இயேசு
ஏற்றங்கள் தருகிறார் இயேசு

கருணைக் கடலே இயேசு
கண்மணிபோலக் காப்பவர்இயேசு

## கார்த்திகை....

காற்றிடை கலந்திட்ட காவலரே
கல்லறை உறைகின்ற வீரர்களே
ஏற்றிய தீபமாய் ஒளிர்கின்றீர்
எங்களின் வாழ்வுக்காய் ஒளிதந்தீர்
சாற்றிய மாலைகள் வாடவில்லை
சத்திய வேள்விக்கு உரமானீர்!..
(காற்றிடை )

காடும் கடலும் தேடிநிற்கும்
காவலர் புகழ் பாடிநிற்கும்
காலத்தை வென்றும் வாழ்கின்றீர்
காவியமாகி நிறைகின்றீர்
ஏட்டிலும் எழுத்திலும் நிறைந்திட்ட
எங்களின் தெய்வங்கள் நீங்களே!..

கார்முகில் பொழிந்து நீராட்டும்
கார்த்திகை மலர்ந்து அர்ச்சிக்கும்
காலனும் கண்ணீர் சிந்துகிறான்!..

காவலர் கவர்ந்த நாளிகைக்காய்
கைமலர் கூப்பி தொழுகின்றோம்
மெய்யது உருகித் துடிக்கின்றோம்
நெய் விளக்கேற்றி வணங்கிடவே
மாவீரர் இல்லம் வருகின்றோம்!...

கீத்தா பரமானந்தன்

## கண்ணீர்த் துளிகள்...

இத்தனை வருடமாய் சமுத்திரத்தில்
எதைத் தேடுகின்றாய்

நீ சேர்த்து வைத்திருந்தவற்றை
சூறையாடிப் போன சுகாமிக்கடலிடம்
இன்னுமா அவற்றைக் கேட்டு
அடம்பிடித்துக் கொண்டிருக்கிறாய்

அலைகளோடு நிதம்
சண்டையிட்டுக் கொண்டு நீ
கதறிய வார்த்தைகள் இப்போதும்
என் காதில் கேட்டுக்கொண்டிருக்கும்

ஒருநாள்கூடஎன்னைப் பிரிந்திருக்க
முடியாத உன்னால் - இவ்வளவு
காலமாக விலகியிருக்க முடிகிறதா

கடைசியாகப்பார்த்த உன்முகம் என்
நெஞ்சைவிட்டு அகலவேயில்லை

இப்போது நீஎப்படிஇருப்பாய் என்றே
நான் ஏங்கிக்கொண்டிருக்கிறேன்

வலியைத் தாங்கும் வலிமையையும்
நான் இழந்து விட்டேன்

நீஎதையும் தேடி நாட்களை இனியும்
கடத்தாமல் தயவு செய்து
சீக்கிரம் திரும்பி வா

நானும்குழந்தைகளும்கரையில்
நின்று
தினமும் உன்னைத் தேடுகின்றோம்!..
-நெடுந்தீவு முகிலன்-

# விடுதலை வித்துக்கள்
# தமிழர்வரலாற்று முத்துக்கள்......

-வசந்தா-

அன்பும் பாசமும் அகத்தினுள் விளையும்
மானமும் வீரமும் மதிப்பினுள் உயரும்
தமிழர் வரலாற்றுப் பாதை தனித்துவமாகும்
ஆண்டாண்டாய் ஆண்ட இனம் ஆளவே துடிக்கும்

விடுதலை வித்துக்கள் விம்மியே வெடிக்கும்
வீரத்தின் தாய்நிலம் வீறுகொண்டெழும்
மாவீரர் சரிதமே மண்வீரம் கூறும்
சாவிலும் சரித்திரம் படைத்தே தான் நிமிரும்

வானும் கனல்சொரிய நிலமும் குருதி பாய
குற்றுயிராய் போனவர்கள் எத்தனை கோடி
பெற்ற வயிறு துடிக்க பேதைகளாய் குழந்தைகள் தவிக்க
இற்றைவரை குற்றுயிராய் தவிடுபொடியானோர் எத்தனைகோடி

நரம்பும் புடைக்கிறது குருதி கொதிக்கிறது
வெந்தணலிட்ட புழுப்போல நாளும் தவிக்கிறது
காலம் கரைகிறது கண்ணீர் மழை சொரிகிறது
நம்விடுதலை வித்துக்கள் உயிர்த்தியாகம் உலகையே –உலுக்கிறது

## தமிழ்

சுயநலச் சுருக்குக்குள்
விழுந்தாலும் அழிந்தாலும்
சதுரங்கக் காய்கள்நகர்ந்தாலும்
அழிக்க முடியாதததுதான் தமிழ்!...

## முடியும்!...

மற்றவனால் முடியாது
மதங்களால் முடியாது
கடவுள்களால் முடியாது
உன்னால் மட்டும் முடியும்!....

-சிவா-

# ஏமாற்றம்...... (சிறுகதை)

-கெங்கா ஸ்ரான்லி-

இரவு 11 மணி.ஊரோ உறங்குகின்ற நேரம். எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து அமைதியாகும் நேரம். அதிகாலையில் வேலைக்குச் செல்வோர் அயர்ந்து தா ங்க.பின்னேர வேலைக்காரர் வேலையால் வர, இப்படி மனித வாழ்க்கை சுழலுகின்றது. இந்த சுழலும் வேகத்தில் தன் பிறப்பிடம் விட்டு, புகலிடம் தேடி வந்தான் பவுல். வந்த இடத்தில் முதலில் அவனுக்கு விசா கிடைக்கவில்லை. களவாக சில வேலைகள் செய்து பிழைத்து கொண்டிருந்தான்.இப்படி இருக்கும் போது தான் அவனுக்கு உணவகம் ஒன்றில் வேலை கிடைத்தது. அதுவும் இத்தாலி நாட்டுக் காரனுடையது.

சும்மா சொல்லக்கூடாது பவுல் ஒரு அழகான ஆம்பிளை, யாரும் கண்டவுடன் காதல் கொள்ளுவர். அப்படியொரு அமைப்பு. இப்படி இவன் அந்த உணவகத்தில் வேலை செய்யும் பொழுது, வாடிக்கையாக உணவு உண்ண வரும் ஒரு அழகான பெண், அவளுக்கு 60 வயது இருக்கும், இருந்தாலும் அந்த வயதிலும் அவளது வடிவு குறையவில்லை. அவள் பெயர் லீனா. லீனா உணவகத்திற்கு வந்தால் உடனே சாப்பிட்டோமா போனோமா எனப் போகமாட்டாள், இருந்து ஆறுதலாக சாப்பிட்டு, மதுவும் அருந்திவிட்டு டாக்சியில் தான் செல்வாள்.இப்படி நாளாந்தம் அவள் வருகையினால் எல்லோருக்கும் அவளை தெரியும். அத்துடன் அன்பானவள் என்று பிடிக்கும்.

இந்த நிலையில் பவுல் மீது லீனா நட்பு கொண்டாள். பவுலுக்கு வயது 24, லீனாவுக்கு 60 வயது. பவுலும் தான் இருந்த நிலையில் அவளைக் காதலித்தான். அது உண்மைக் காதலோ, சுயநலமோ அப்போது புரியவில்லை. அப்படியே இவர்கள் நட்பு காதலாகி பொழுது லீனா சற்று தனது வயதை யோசித்தாள். ஆனால் பவுல் வயதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்று சொன்னான். அப்போது அவள் அதை நம்பி விட்டாள். இருவரும் சட்டப்படி எழுத்து என்று சொல்வார்களே அப்படி திருமணம் செய்து கொண்டனர். பவுலும் லீனாவும் ஒரே வீட்டில் தான் வசிக்கின்றனர். லீனாவின் வீடு ஒரு பங்களா.

பவுலுக்கு மிகுந்த சந்தோஷம். விசா கிடைத்துவிட்டது. இப்போது ஒரு தொழிற்சாலையில் வேலை. லீனாவால் கார் பங்களா, வேலை எனப் பவுல் மகிழ்ச்சியாக இருந்தான்..

பவுல் தான் உழைக்கும் பணம் முழக்க நாட்டுக்கு அனுப்பிவிடுவான். லீனாவின் செலவில் அவனது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. பவுலுடைய குடும்பமும் இப்போ நல்ல வசதியாக வாழத்தொடங்கினர்.இப்போது பவுல் யோசித்தான் நாட்டில் ஒரு விடுதி(Hotel)) கட்டினால் வசதியாக இருக்கும் என லீனாவுடன் கதைக்க அவளும் அதுக்கென்ன நாம் லீவுக்கு சென்றால் அங்கு தங்கலாம் நல்ல ஐடியா என்று சொன்னாள்.

இப்போது பவுல் விடுதி கட்டத்தொடங்கிவிட்டான்,லீனாவும் காசு கொடுப்பாள். இந்த விசயமாக பவுல் நாட்டிற்கு அடிக்கடி போய் வருவான். இதன் போது அங்கு ஒரு பெண்ணின் அறிமுகம் கிடைத்தது. இருவரும் நன்றாக பழகினர். இப்படி இருக்கையில் பவுல் வீட்டுக்காரர் அந்த பெண்ணை அவனுக்கு திருமணம் செய்து வைத்தனர். இந்த விசயம் லீனாவுக்கு தெரியாது.அவளுக்கும் வயது போகிறதுதானே!.

பவுலும் தன் இளமைக் கேற்ற வாறு வாழ்க்கையை அமைத்துக்கொண்டான்.

இப்படியே ஓரிரு வருடங்கள் செல்ல பவுலின் நடத்தையில் சில மாற்றங்கள். இரவு வேலையென சில நேரங்கள் வீட்டிற்கு வருவதிலை. அதிக நேரம் வெளியில் செலவு செய்வான்.லீனா நினைத்தாள் அவன் விடுதி கட்ட நேரமின்றி உழைப்பதாக. ஆனால் அவனோ தனது இளம் மனைவியுடன் குடும்பம் நடத்துவது அவளுக்கு தெரியாது. இப்படி இருக்கையில் பவுல் வீட்டிற்கு வருவதைநிறுத்திக்கொண்டான். விடுதி எல்லாம் கட்டி முடிந்தாயிற்று. எல்லாம் நிறைவான வாழ்க்கை. இனி என்னத்திற்கு என்று தனது தொலைபேசி ஈறாக எல்லாம் நிறுத்திக்கொண்டான்.

லீனாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தான் கடன் எடுத்து கொடுத்த வங்கி அவளைத் துரத்தியது. அதாவது பவுல் விடுதி கட்ட லீனா வங்கியில் தனது பெயரில் கடன் எடுத்துக்கொடுத்தாள். பவுல் அந்தப் பணத்தை திரும்ப செலுத்தவில்லை அதனால் அவளுக்கு நீதிமன்றத்திலிருந்து கடிதம் வந்திருந்தது. அவளிடம் கையில் பணமில்லை எல்லாம் பவுலிடம் கொடுத்தாயிற்று.

இனி என்ன செய்வது என்று யோசித்துவிட்டு தனது பூர்வீக சொத்தான பங்களாவை விற்று வங்கி தொகையை செலுத்திவிட்டாள். பின் மிகுதி பணம் கொஞ்சம் கையில் இருந்தது. சரி அந்தப் பணத்தோடு பவுலிடம் சென்று வாழலாம் என நினைத்து அங்கு சென்றாள். அந்தோ! பரிதாபம் அங்கு அவன் இல்லை. அவர்கள் இருந்த வீட்டை காலி செய்து விட்டு போய் விட்டார்கள் என்று அயலவர்கள் சொன்னர்கள்.

ஆனால் எங்கு என்பது அவர்களுக்கு தெரியவில்லை. லீனாவும் பவுலைத்தேடினாள். அவள் கையிலிருந்த பணம் கரைந்தது. ஆனால் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்போதுதான் தான் அவளுக்கு விளங்கியது பவுல் தன்னை ஏமாற்றி விட்டான் என்று.தான் கூட யோசிக்கவில்லை தனது வயது,
தனது நிலைமை, இப்படி ஒரு வெளிநாட்டுக் காரனிடம் ஏமாந்து விட்டேனே என்று கதறி அழதாள்.என்ன செய்வது அன்பு என்ற ஒரு சொல்லால் சிலர் அனைத்தையுமே சாதித்து விடுகிறார்கள். அனால் அந்த அன்பை உண்மையாக நினைத்தவரை எவ்வளவு பாதித்து மனக்கவலை உண்டாக்கி படுகுழியில் விழத்திவிடுகிறது.

வாழ்க்கை என்றால் இப்படித்தான் யாரையாவது நம்பித்தான் ஆக வேண்டும். ஆனால் லீனாவிவைப் போல அல்ல. பாவம் லீனா இப்போ வீடுவாசல் இழந்து நடுத்தெருவில் அபலையாக நிற்கிறாள். அவள் அடைந்த ஏமாற்றம் இனி எவருக்கும் நடக்கக்கூடாது என இறைவனை வேண்டி கொண்டாள்.

"ஏமாறுபவர்கள் இருக்குமட்டும் ஏமாற்றுபவர்கள் ஏமாற்றி கொண்டே இருப்பர்"!

---------------

## முடியும்!...

மற்றவனால் முடியாது
மதங்களால் முடியாது
கடவுள்களால் முடியாது
உன்னால் மட்டும் முடியும்!....

## மகிழ்ச்சி!...

அன்பைக் காட்டிப்பார்
அவர்களுக்கு உதவிப்பார்
அவர்களோடு வாழ்ந்துபார்
அதுவே மகிழ்ச்சியின் மகுடம்!...

# நஞ்சு....

-கவி மீனா-

தினமும் நாம் உண்ணும் உணவுகளில் கூட நச்சு தன்மை கலந்தே இருக்கிறது, நாம் ஒரு நோய்கு சாப்பிடும் மருந்துகள் கூட எமக்கு ஒவ்வாமை உருவாக்கி விஸமாக மாற கூடும்
ஒரு பெண்ணுக்கு அலர்ஜிக்கு போட்ட ஊசி மருந்து அவரது சிறு நீரகத்தை பாதிப்பு அடைய செய்து விட்டதாக சொல்கிறார்கள் ஆங்கில மருந்தில் ஒரு வருத்தம் குணமானாலும் வேறு ஒரு வருத்தம் வருகிறது பக்க விளைவாக!

ஒவ்வொரு உணவிலும் நாள் பட்டால் அது அழுகி நச்சு தன்மை வருகிறது பழுதாகி போன உணவுகளை நாம் உண்ண நேரிட்டால் அதுவும் நஞ்சாகவே மாறி விடும் உருளை கிழங்கு முளைக்கும் நேரத்தில் பச்சை நிறம் அதன் தோலில் எற்படுகிறது, அப்படி பச்சை நிறம் வந்த கிழங்கை சாப்பிட்டால் அதுவும் நஞ்சு என சொல்கிறார்கள். மரவள்ளி கிழங்கின் பிங் நிற உள் தோலில் நச்சு தன்மை இருப்பதாக நம்பப் படுகிறது, அத்துடன் மரவள்ளி கிழங்கும் இஞ்சி கிழங்கும் ஒரே நேரத்தில் சேர்த்து சாப்பிட்டால் அதனால் நச்சு தன்மை உருவாகிறது சாப்பிட்டவர்களுக்கு தீங்கு நேரும் என அனுபவ பட்டவர்கள் கூறும் வாக்கு.

கடுக்காய் போல் மருந்து இல்லை என்கிறார்கள் இயற்கை வைதியர்கள் ஆனால் கடுக்காயின் உள்ளே இருக்கும் கொட்டையில் நச்சு தன்மை இருக்குது என்று சொல்கிறார்கள் கொட்டையை நீக்கிதான் கடுக்காயை உபயோகிக்கலாம். இதைவிட இன்றைய சேதி ஒன்று இங்கு சில கோழிகள் போட்ட முட்டையில் நச்சு தன்மை இருந்து அதை உண்டவர்கள் மரண படுக்கையில் இருப்பதாக ஒரு செய்தி கேட்டதும்தான் இந்த நஞ்சு பற்றி எழதவே யோசித்தேன்

கோழிக்குள்ளே இருந்து வந்த முட்டை நஞ்சு என்றால் இந்த கோழி மட்டும் எப்படி உயிரோடே இருக்குதோ? தெரியவில்லை நச்சு தன்மை எல்லா இடமும் கலந்தே நிக்குறது. அறணை கடித்தால் மலையிலும் மருந்து இல்லை என்பார்கள் அது அப்படி ஒரு விசமுடைய பிராணி அதை விட தேள், பல்லி, பூரான் என

பல பல விஷ ஜந்துகள் உலகிலே சிவனுக்கு கண்டத்தில் நஞ்சு பாம்புக்கு பல்லிலே நஞ்சு மனிதர்களுக்கோ நாவிலே நஞ்சு! இந்த ஆண்டவன் படைப்பில் அண்டத்தில் எங்கும் நஞ்சு! நஞ்சு!

---

## வெற்றுத்தாளில் வர்ண சித்திரம்.......

வெற்றுத்தாள் வெறுந்தரையில்
வெறுமையாய் வெளிச்சத்தில்
வெறுங்கை கொண்டு வரைந்த
வெண் நிறத்தில் ஒருசித்திரம்
மைவிழி பார்வையில்
மையக் கருத்து புலனில்
தெளிவாகமை தீட்டமுடியாமல்
மையிருட்டில் அடங்கியது மனம்
வர்ணத்தில் தீட்டிய
வரைபடமானால்
வசீகர தோற்றம் அன்றோ
வண்ணங்கள் கண் கவரும்
வனப்பு நின் மதி மயக்கும்
நம்பிக்கையின் நட்புவாழ்க்கை
நகர்த்துவது எம் கையில்
நாளை என்பது இன்றேதான்
நலத்தை நட வேண்டும்
விருட்சம் பெற....

-மீரா-

# நீ!...நீயாகவே இரு!......

-சுகந்தி-

நம்மை பற்றி ஒவ்வொருவருக்கும்ழ ஓழஒரு தனியான பார்வை உண்டு.ஆதலால் - பிறரிடம் உங்கள் பிம்பத்தை அழகாக்கிக் காட்ட சிரமப்படாதீர்கள் மற்றவர்கள் உங்களை புரிந்துகொள்ளாவிட்டாலும்...... நீங்கள் நீங்களாகவே இருங்கள் மனிதர்களை திருப்திப்படுத்துதல் என்பது எட்ட முடியாத இலக்கு..இந்த மனிதர்களிடம் எட்ட முடியாததை விட்டு விடுங்கள்! அடைய வேண்டியதை விட்டு விடாதீர்கள். எப்போதும் நேர்மையும் தைரியமும் உங்கள் சொத்தாக இருக்கட்டும் வாழ்வோம்.. பிறரையும் வாழ வைப்போம். நீ...நீயாக இரு!

தங்கம் விலை அதிகம்தான்..தகரம் மலிவு தான்..ஆனால் தகரத்தைக் கொண்டு செய்யவேண்டியதை தங்கம் கொண்டு செய்ய முடியாது அதனால் தகரம் மட்டமில்லை. தங்கமும் உயர்ந்ததில்லை. எனவே நீ ....நீயாக இரு! கங்கை நீர் புனிதம் தான்..அதனால் கிணற்று நீர் வீண் என்று அர்த்தமில்லை.. தாகத்தில் தவிப்பவருக்கு கங்கையாயிருந்தால் என்ன? கிணறாகயிருந்தால் என்ன? நீ...நீயாக இரு! காகம் மயில் போல் அழகில்லைத்தான்..ஆனாலும் படையல் என்னவோ காக்கைக்குத்தான்! நீ...நீயாக இரு!

நாய்க்கு சிங்கம் போல் வீரமில்லைத்தான். ஆனாலும் நன்றி என்னவோ நாய்க்குத் தான் நீ...நீயாக இரு! பட்டு போல் பருத்தி இல்லைத்தான்...ஆனாலும் வெயிலுக்கு சுகமென்னவோ பருத்திதான்! நீ...நீயாக இரு! ஆகாசம் போல் பூமி இல்லைதான்....ஆனாலும் தாங்குவதற்கு இருப்பது பூமிதான்! நீ....நீயாக இரு! நேற்றுப் போல் இன்றில்லை...இன்று போல் நாளையில்லை...அதனால் ஒவ்வொன்றும் அற்புதம்தான்! எனவே நீ...நீயாக இரு!

அதில் வெட்கப்பட ஒன்றுமில்லை! அதில் வருத்தப்பட ஒன்றுமில்லை! அதில் நொந்துபோக ஒன்றுமில்லை! அதில் பாவம் ஏதுமில்லை! அதில் அசிங்கம் ஒன்றுமில்லை! உன்னை உரசிப் பார் உன்னை சரி செய்து கொண்டே வா. நீ...நீயாக இரு! உலகம் ஒரு நாள், உன்னைப் போல் வாழ ஆசைப்படும். நீ...நீயாக இரு! உலகம் ஒரு நாள் உன்னை உதாரணமாகக் கொள்ளும்! ! ! நீ... நீயாக இரு உலகம் ஒரு நாள், உன்னைப் பாடமாக ஏற்கும் ! ! ! நீ...நீயாக இரு உலகம் ஒரு நாள், உன் வழி நடக்கும் ! ! ! நீ...நீயாக இரு! அடுத்தவனுக்காக மாறி உனக்காக உள்ளோரை இழக்காதே ! ! ! நீ...நீயாக இரு! நீ ...நீயாகவே இரு!...

# வாசிக்க மறக்கும் தலைமுறை...

Gowsi-Germany

ஆதிமனிதன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தத் தனது உடல் அங்கங்களைப் பயன்படுத்தி

"விலங்கொடு மக்க ளனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர்"

கல்வியறிவுடையோரே மனிதரென்றும், அஃதிலாதோர் விலங்குகளெனவும் திருவள்ளுவர் எடுத்தியம்புகின்றார்.

"நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய மாட்டான் காட்டில் நன்மரம்"என்று சொன்னார் ஔவைப்பிராட்டியார்.

பரந்துபட்ட அக்கல்வியறிவை சிந்தையில் நிறுத்தி அறிவுச் செல்வத்தை சிரத்தையுடன் தேடும் போது மனிதவாழ்வு சிறப்படைகின்றது. அக்கல்வியின் ஆணிவேராக வாசித்தலே அமைகின்றது. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது முதுமொழி. மனவிசாரங்களும், மனவிகாரங்களுமற்ற இளமைப்பருவக்கல்வி சிந்தாது, சிதையாது, சிதறாது மனதில் நன்றாகப் பதியும். எனவே கல்விக்கு அடித்தளமான வாசிப்பு இளமையிலேயே அரும்பி வருதல் வேண்டும். வாசிப்பு என்பது மேலோட்டமாய் வாசித்தல், ஆழமாய் வாசித்தறிதல் என்று இரு வகைப்படுகின்றன. சஞ்சிகைகள் மேலோட்டமாய் வாசிக்கப்படுகின்றது. அதுகூட மூளையின் ஏதோ ஒரு மூலையில் பதியப்பட்டு அவ்வப்போது எமது தேவைக்கு வெளிக் கொண்டு வரப்படுகின்றது. "கற்க கசடற கற்க" என்பது போல சந்தேகம் நீங்க கற்கும் போது ஆழ்மனதில் கற்கும் விடயம் ஆழமாகப் பதியப்படுகின்றது.

ஆரம்பக் கல்வியைத் தொடங்குவதற்குப் பாடசாலைக்கு வரும் மாணவன் ஏறத்தாள 2700 க்கு மேற்பட்ட சொற்களைக் கற்றுக் கொண்டே வருகின்றான் என ஆய்வுகள் கூறுகின்றன. கற்கும் ஆவலுடன் வருகின்ற ஒரு சிறுவனின் மூளையானது வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் போது மேலும் மெருகேற்றப்படுகின்றது. புதிய சொற்களைக் கற்கும் ஆர்வம் தேடலின் உச்சத்திற்குக் கொண்டுவிட வாசித்தலின் பெறுமதி ஊக்குவிக்கப்படுகின்றது. மொழிப்பயன்பாடு அதிகரிக்கின்றது. கற்றலில் மொழிச் செல்வாக்கு அதிகரிக்கின்றது.

வாசித்தலில் ஊக்கம் குறைந்த மாணவன் கற்றலும் பின் தங்கி இருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

வாசித்தலுக்கு மனம், கண், நா, காது, மூக்கு, குரல் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் வாசித்தலுக்கு மன ஒருமைப்பாடு அத்தியாவசியமாகின்றது. வாய்விட்டு வாசிக்கும் போது ஏற்படுத்தப்படுகின்ற உச்சரிப்பானது வாய் மூடி மனதால் வாசிக்கின்ற போதும் எமது மனதினுள் ஒலிக்கும். எனவே கற்பிக்கின்றபோது உச்சரிப்பு சரியான முறையில் கற்பிக்கப்பட வேண்டும். வெறுமனே வாசித்துச் செல்லும்போது அதில் பயன் ஏதும் கிடைப்பதில்லை. பொருளுணர்ந்து மனதுள் ஆழப்பதிக்கும் போதே வாசிப்பு முழுமையுறுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாசிப்புப் பழக்கமானது பண்பாட்டு விழுமியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

கல்வியைப் பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேள்வி முதலிய பலவழிகள் உளவேனும், அவற்றுள் தலைசிறந்தது காட்சிப்படுத்தல் மூலம் கிடைக்கும் வாசித்தலே. செய்தித்தாளிலே, ஆசிரியர் குறிப்பு, உலகச்செய்திகள், விளையாட்டுத்துறை, பொதுஅறிவு, இலக்கியம், குறுக்கெழுத்துப் போட்டி போன்ற பலவிடயங்கள் அடங்கிக் காணப்படுவதனால், ஒவ்வொருத்தரும் தாம் தமக்கு விருப்பமான துறையைத் தெரிவுசெய்து வாசிக்கக்கூடியதாக இருக்கின்றது. செய்தி, கட்டுரை, விமர்சனம், அறிக்கை போன்றவை செய்தித்தாளில் இடம்பெறுவதால் இவை ஒவ்வொன்றின் வேறுபாடுகளையும் அறிந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றது.

இன்று கணனித்துறை உலகமெல்லாம் மிகச்சிறந்த துறையாகக் கருதப்படுகின்றது. வாசித்தலுக்கு இலகுவானதாகவும் உலகம் முழுவதும் இருக்கும் விடயங்களைத் தேடி வீட்டினுள்ளே இருந்தபடி தேடிப் பெற முடியாத பல புத்தகங்களை விரல் தட்டலின் மூலம் கண் முன்னே கொண்டுவந்துவிட முடிகின்றது. இப்போது கைக்கடக்கமான மின்சாரப்புத்தகம் (Electronic Book) பலர் கைகளில் தவழுகின்றது. தேவையான புத்தகத்தைக் கணனியிலிருந்து பதிவிறக்கம் செய்து போகும் இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்று வாசிக்கக் கூடியநிலை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு வாசித்தல் மனிதர்களிடையே மேலும் மேலும் வளர்க்கப்படுகின்றது. சஞ்சிகையிலே வருகின்ற தொடர்கதையானது மக்களிடையே தொடர்ந்து வாசிக்கும்

பழக்கத்தைத் தூண்டுவதாக இருக்கின்றது. சிரிப்பதனால் நோய் தீரும். நகைச்சுவை துணுக்குக்கள் வாசகரைச் சிரிக்கவைத்து அவர்கள் மனதிலே மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஓமோன்கள் சுரக்கப்பட வாசித்தலும் ஒரு காரணமாக அமைகின்றது.

கணிதம், விஞ்ஞானம், மொழி முதலிய பாடங்களைக் கற்கும் மாணவன் ஒரு விவேகியாக இருந்தாலும் பொது அறிவு இலனாயின் அவனுடைய விவேகத்தால் முழப்பயன் பெறமுடியாமல் போய்விடும். பாடநூல்களோடு பற்பல உலகச்செய்திகள் அறியும் போதே பரந்துபட்ட உலக அறிவு பெற்று உலகுக்கேற்ப வாழப்பழகிக் கொள்வான். பல்வேறுபட்ட கலாச்சார விழுமியங்களை வாசிப்பின் மூலம் அறிந்து கொள்வதுடன் நல்லன தீயன எவையெனப் பகுத்துணரும் பண்பைப் பெறும் அவனுள்ளம், விரிவடைகின்றது. எதிர்கால வாழ்வுக்குத் தம்மை ஆயத்தஞ் செய்து கொள்ளும் உன்னதநிலை உண்டாகின்றது. வாசித்தலைப் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் வேறு தேவையற்ற எண்ணங்களுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாதவனாகக் காணப்படுவான்.

எதிர்காலச் சிற்பிகள் அறிவாளிகளாகவும் உள்ளத்தால் உயர்ந்தவர்களாகவும் வளர வேண்டுமானால், கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பதற்கிணங்க, ஒவ்வொருவரும் நல்லனவென கண்டவற்றை வாசித்துக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதுவே அவனை வாழ்வின் உச்சிக்கு இட்டுச் செல்லும். ஆய்வுக்கு வழிவகுக்கும், புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ஊக்கமளிக்கும், புதுமை விரும்பியாக மாற்றும், சிறந்த சிந்தனைவாதிகளாகத் திகழ வைக்கும்.


"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்னும் முதுமொழிக்கிணங்க நாலுங்கற்று உலகின் நாயகர்களாய்த் திகழ்வோம்!...

----------------

பொன்மொழி...

சிறந்த ஆசிரியர் ஒரு போதும் வகுப்பறைக்குள் நுழைவதில்லை மாணவரின் இதயத்துள் நுழைகின்றார்....

# அறிவியலுடன் கூடிய ஆன்மிகம்......



கண்ணுக்குப் புலப்படாத உயிருள்ளவரை மனித வாழ்வு உடல் இயக்கம் உள்ளதாக இருக்கும். மின்சாரம் மின் கம்பிகளில் ஓடுவதை போல உடலில் உயிர் ஓடிக்கொண்டு இருக்கின்றது. மின்னோட்டத்தின் தடையோ மாற்றமும் ஏற்பட்டால் அந்தக் கருவி பழதாகிவிடும் இதைப்போலவே உயிர் ஓட்டத்தில் மாற்றமோ தடையோ ஏற்பட்டால் உடலில் வலி நோய் என்பன ஏற்படும் உறுப்புக்கள் பாதிக்கப்படும் மின்சாரம் செல்லும் கம்பியை சுற்றி காந்தம் உருவாவதை போலவே மனித உடலை சுற்றி காந்த அடர்த்தி இருக்கும் இந்த ஜீவகாந்த அடர்த்தி ஒருவனின் அறிவாட்சித் திறனோடு தொடர்பு கொண்டது என்பதை தற்கால மருத்துவம் மனோவியல் மற்றும் தத்துவ முறைகள் நிரூபித்துள்ளன.

ஒரு மனிதனின் உடல் மன ஆற்றல்களை மேம்படுத்தி அழகியல் பழக்கம் வாழ்வியல் தத்துவங்களை ஒத்துப் போவதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனிற்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளான மற்றவர்களிடம், அன்பாகவும் நன்றியுணர்வுடன் பழகுதல், தனது தவறுகளை திருத்திச் செயல்படும்

மனத்திறன், சூழ்நிலைகளைக் கட்டுப்பாடுடனும் சுய ஒழுக்கத்துடனும் கையாளுதல், நல்லெண்ணத்துடன் கூடிய நேர்மை குணம், புதிய சவால்களை எதிர்கொள்ளும் துணிவு இவை அனைத்தும் ஆன்மீகம் கற்றுக் கொடுக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை

"மதங்களும், கலைகளும், விஞ்ஞானமும் ஒரு மரத்தின் பல்வேறு கிளைகள்" என்று நோபல் பரிசு பெற்ற அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகின்றார். பரிமாண வளர்ச்சி தத்துவத்தை மொழிந்த சார்லஸ் டார்வின் "மனித குலமும் இந்த பிரபஞ்சமும் இறைவன் இருப்பதற்கான மிகப்பெரிய அத்தாட்சி" என்கின்றார். இன்றைய தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தின் தந்தையான விஞ்ஞானி மார்க்கோனி "இறை உணர்வுடன் ஜெபத்தின் சக்தியில் அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்குண்டு, நான் ஒரு கத்தோலிக்கன் என்பதனால் மட்டுமல்ல நான் ஒரு விஞ்ஞானி என்பதனாலும் இறை நம்பிக்கை உடையவனாக இருக்கிறேன்." என்கிறார் மார்க்கோனி. ஆன்மீகமும் இறை நம்பிக்கையும் அறிவியலுக்கு ஏற்புடையது அல்ல என்பது போன்ற வாதத்தை சிலர் வைக்கின்றார்கள். அது தவறானது, தன்னம்பிக்கையை ஆன்மீகம் வளர்கின்றது. தோல்வியை கண்டு துவளாத மன நிலையை ஏற்படுத்துகின்றது.

உடல் உள மன ஆற்றல்களை மேம்படுத்தும் வழிமுறைகள் பகவத்கீதையில் காட்டப்பட்டுள்ளது சிறந்ததொரு அறிவியல் நூலாக திருமந்திரம் காணப்படுகின்றது. பல அறிவியல் விடயங்கள் அதில் காட்டப்பட்டுள்ளது. பொதுமறையாம் திருக்குறளில் வாழ்வியல் அறிவுரைகள் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. இவை மட்டுமல்ல, ஆராய்ந்து பார்த்தோம் என்றால் ஆன்மீக நூல்கள் என நாம் விலக்கி வைக்கும் பல நூல்களில் அறிவியல் மிகுந்து இருப்பதும் நோயைத் தீர்த்து வைப்பதற்கும், தணித்து வைப்பதற்கும், உருவாகாமல் இருப்பதற்குமாகவும் உணவே மருந்து எனவும் இங்கே அதிகமாக பொக்கிஷங்கள் அறிவுடன் விளக்கப்பட்டுள்ளன. இவற்றை மத வேறுபாடின்றி புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

எழுத்து,
மங்கை அரசி.

# ஜேர்மனியச் செய்திகள் சில...

1-ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது எவ்வளவு முக்கிமானது. அந்த நாடு வலுவுள்ள நாடாகவும் பாதுகாப்பான நாடாகவும் விளங்க பெருமளவு நிதியை அரசுகள் வருடாவருடம் ஒதுக்குகின்றன. அந்தவகையில் யோ்மனி பாதுகாப்பச் செலவுகளுக்காக வருடாவருடம் ஒதிக்கிய நிதியை இந்த அட்டவணை காட்டுகின்றது.

| | |
|---|---|
| 01-2010 - 31.2 பில்லியன் யூரோ | 02-2011 - 31.4 |
| 03-2012 - 32.9 | 04-2013 - 32.5 |
| 05-2014 - 32.9 | 06-2015 - 33.7 |
| 07-2016 - 35.1 | 08-2017 - 36.9 |
| 09-2018 - 38.9 | 10-2019 - 42.2 |

2-யோ்மனியில் தற்போதுள்ள படையினரின் எண்ணிக்கையைப் பார்த்தால்
-தரைப்படை - 62.140 பேர் -விமானப்படை - 27.725
-கடற்படை - 16.365 -பாதுகாப்பு உதவிப் படையினர் - 27.620 பேர்
-சுகாதார தொண்டர் படையினர் - 19.888 -கணனி, தொழில் நுட்பப்படையினர்- 13.133 -தொண்டர் படையினர் - 14.506
மொத்தமாக 1.81.377 பேர்

3-உலகில் நடைபெறும் குற்றச் செயல்களில் பாலியல் துஸ்பிரயோகங்களும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. உலகில் இச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது. யோ்மனியில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கின் அதிகரிப்பைப்பார்த்தால்
2016ல் - 5.687 சம்பவங்கள், 2017ல் - 6.512, 2018ல் - 7.449.
அரைவாசிக்கு மேல் தந்தை, வளர்ப்புத்தந்தை, சகோதரர்கள், மாமன்மார், நண்பர்கள் என குடும்ப உறவுகளாலேயே நடைபெற்றிருக்கின்றன.

4-2018ம் ஆண்டு கணனி ஊடாகக் கட்டளையிட்டதன் மூலம் (Onlineshops) பொருட்களை விற்பனை செய்த தாபனங்களின் வரிசையையும் அத்தாபனங்களின் வியாபார நடவடிக்கைகளையும் பார்ப்போம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 -Amazon | - 9,278 Mio. Euro | | 6-Lidl | - 694 Mio.Euro | |
| 02- Otto | - 2.998 | " | 7-Bon Prix | -591 | " |
| 03-Zalando | - 1.388 | " | 8-Apple.Com | -528 | " |
| 04-Media Markt | - 809 | " | 9-Cyberport.de | -517 | " |
| 05-Notebook billiger | - 743 | " | 10-Conrad | -489 | " |

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 2 | 4 | 5 | 9 | 3 | 1 | 8 |
| 8 | 4 | 1 | 3 | 7 | 6 | 9 | 2 | 5 |
| 3 | 5 | 9 | 1 | 2 | 8 | 6 | 7 | 4 |
| 9 | 2 | 6 | 8 | 1 | 7 | 5 | 4 | 3 |
| 4 | 8 | 3 | 5 | 6 | 2 | 1 | 9 | 7 |
| 7 | 1 | 5 | 9 | 3 | 4 | 2 | 8 | 6 |
| 5 | 9 | 7 | 6 | 8 | 1 | 4 | 3 | 2 |
| 1 | 3 | 8 | 2 | 4 | 5 | 7 | 6 | 9 |
| 2 | 6 | 4 | 7 | 9 | 3 | 8 | 5 | 1 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-102

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ரி | மோ | த் | த |
| சா | டி | தா | த் |
| ஆ | ல் | ய | பு |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 165

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ந | த் | தா | ர் | த | த் | பு |
| ல் | னி | அ | ர | வ | ம் | த் |
| வ | ன் | னி | வீ | ளை | ப | த |
| ழி | க | ர் | மா | லை | ம் | ள |
| க | ர் | ண | ன் | மா | ர | ம் |
| ர் | வ | மி | னா | சு | ஆ | மை |
| மா | ம் | ண | ண் | க | ட | ம் |

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலன்-



வணக்கம்!..வணக்கம்!...

நான்தான் மதவடி மயிலன்... மீண்டும் வந்திருக்கிறன். என்ன எல்லாரும் சுகம்தானே. இந்த மயிலன் உங்களிடம் சுகம் விசாரிப்பதில் ஒரு சந்தோசம்தான். வேறு ஒன்றுமில்லை. சுகநலம் விசாரிக்க...

இதனால எங்கட ஆட்கள் பட்ட துன்பங்கள் பலவிதம் கண்டியளோ!...என்ன செய்வது காசு...காசு என்று உலகம் முழக்க அலையும் தமிழன் இதையெல்லாம் அனுபவிக்கத்தானே வேண்டும்.

இப்ப பாருங்கோ இந்த வெளிநாடுகளில் குளிர் தொடங்கிவிட்டது. அடிக்கடி இந்தக் குளிர் கூடிக் கறைவதால் இங்க பல பேருக்கு காய்ச்சல் இருமல் தடிமல் அலர்ஜி என பல வருத்தங்களும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக வந்துகொண்டிருப்பதால நம்மவர்கள் பலர் பெரும் துன்பம்தான் கண்டியளோ. இந்த மயிலனும் விதிவிலக்கே. மயிலனும் டொக்டரும் வீடுமாக அலைந்து இப்ப கொஞ்சம் பறவாயில்லை...உங்கள் பாடும் என்னவோ?.. எல்லாம் ஆண்டவன் பார்த்துக் கொள்வான் என்று சும்மா எல்லாரும் சொல்லுறதைப் போல இந்த மயிலனும் சொல்லத்தானே வேணும்...

சரி..சரி..இனிவிசயத்துக்கு வரலாம் என்று எண்ணுகிறன். அதாவது புலம்பெயர் நாடுகளில் இந்த ஐயர்மார், குருக்கள் என்று சொல்லப்படுபவர்களின் சில விடையங்களைச் சொல்லப் போறன். நீங்களும் கொஞ்சம் படித்துப்பாருக்கோ. இதில் ஏதும் முரண்பாடுகள் இருந்தால் மண் சஞ்சிகையின் தம்பிக்கு எழதுங்கோ அவர் இதில போட்டால் நீங்களும் வாசிப்பீர்கள்தானே.

எங்களைப் போல அகதியாக வந்த ஐயர்மாரும் குருக்கள்மாரும்

பின்னர் கோவிலுக்காக வந்த ஐயர்மாரும் குருக்கள்மாரும் தமது வசதிக்கேற்றவாறு ஆங்காங்கே கோவில்களையும் திறந்தனர். இன்றும் புதிய புதிய கோவில்களைத் திறப்பதற்குச் சிலர் ஓடித்திரிகிறார்கள் என்றால் ஏதோ சங்கதி இருக்குதுதானே பாருங்கோ!.. எல்லாம் காசு..காசு.. பணம்...பணம்...துட்டு..துட்டு...மணி... மணி...தான்!...

ஆம் பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்று நம்மவர்கள் சொல்வதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது. இந்த எங்கட சமய ஐயர், குருமாரும் காசு காசு என்று அலைவதை அன்றாடம் நீங்களும் கண்டிருப்பீர்கள் என்று இந்த மயிலன் நம்புகிறான். கடவுள், பத்தி, மோட்சம், மறுபிறப்பு என்று கூறி சாதாரண மக்களை நம்பவைத்து ஏமாற்றிப் பிழைப்பு நடத்திவரும் இவர்களைப் பகல் கொள்ளைக்காரர்கள் என்றும் சொல்லாமல் எப்படி விடுவது பாருங்கோ..

இந்த மயிலனுக்கு இவர்கள் மீது ஆத்திரம் என்று நினைத்துவிடாதையுங்கோ.. ஏமாறும் உங்கள் மீதும் சமயத்தை சாத்திரங்களை, கலை, பண்பாடுகளை வைத்து ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டத்தினர் மீதும்தான் இந்த மயிலனுக்குச் சரியான கடுப்பு கண்டியளோ.

புலம்பெயர் நாடுகளில் சின்னச்சின்ன நகரங்களில் தமிழ்ப் பாடசாலைகள் இயங்கிவருகின்றன. ஒரு வழியில் நல்லது தான். ஆனால் போட்டி போட்டுப் பாடசாலைகள் திறப்பது போல கோவில்களும் சின்னச்சின்ன நகரங்களில் மூன்று, நான்கு கோவில்களை திறந்து வியாபாரமாக்கியது யார் குற்றவாளி?..நீங்களா?..அல்லது இந்த ஐயர் குருக்கள் குற்றமா?.. ஒருக்கா சிந்தித்துப்பாருங்கோ புலம் (புலன்) பெயர் வள்ளல்களே! அடியாளர்களே!..

கோவில்கள், வழிபாடுகள் இருக்கத்தான் வேண்டும். இதற்கு இந்த மயிலனுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் இவைகளைச் சாட்டிப் பிழைப்பு நடத்தி சாதாரண மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்திவரும் இவர்களைத்தான் இந்த மயிலன் கண்டிக்கிறான். அதாவது தாயகத்தில் தினம் தினம் படிட்டினி கிடந்து இறந்துவரும் மக்களைச் சிந்திக்காமல் ஆடம்பரமாய் திருவிழாக்களை நடத்துவோரையும் அன்னதானம் என்று வழங்கி தெருவெல்லாம் கொட்டிச் சிந்தி ஏன் கோவில்களிலும் கொண்டேனர் தொட்டிகளை நிறைத்து எவ்வளவு உணவுகளை வீணாக்கும் வித்தகர்களுக்குப் பொன்னடை!..

புலம்பெயர் நாடுகளில் ஐரோப்பாவில் சில இந்துக் கோவில்கள் உண்மையில் நல்ல செயற்திட்டங்களைச் செய்து வருகின்றன. இவர்களுக்கு இந்த மயிலன் ஒரு கும்பிடு போடுகிறான். அதாவது இங்கு கோவில்களில் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை தாயகத்திலுள்ள ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களுக்கு வழங்கி வருவதுடன் பல சமூக நலத்திட்டங்களையும் நடாத்தி நம்மக்களின் துயர் போக்கி வருகிறார்கள். இதுதான் யதார்த்தமாக எல்லாக் கோவில்களும் செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்களை மயிலன் மட்டுமல்ல நீங்களும் பாராட்டி மேலும் உதவவேண்டும் என்பதுதான் இந்த மயிலனின் கோரிக்கையாகும்..

ஆனால் இங்கு என்ன நடக்குது என்று கொஞ்சம் சிந்தியுங்கோ அடியாளர்களே!.. ஆயிரம் சீர்கேடுகளை இந்த மயிலன் எடுத்துக் காட்டுவான். இதில எழுதக்காணாது பக்கங்கள். சுருக்கமாகச் சொன்னால் இன்று புலம்பெயர் ஐயர்மார், குருக்கள்மார் பெரும் பணக்காரர்களாக (கோடீஸ்வரர்களாக) மாறிவிட்டார்கள். எல்லாம் நீங்கள் கொடுத்த பணம்தான். இவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருக்கும் ஜீப், கார்களின் பெறுமதி இலங்கைப் பணத்திற்கு10-15 கோடி பெறுமதியாம். இவர்கள் வேண்டி வைத்திருக்கும் வீடுகளும் இப்படிப் பல கோடி விலைதான். இவை மட்டுமல்ல ஊரிலும் புலம்பெயர் தேசங்களிலும் ஆங்காங்கே வைத்திருக்கும் சொத்துக்கள் எத்தனை கோடி இந்த மயிலனால கணக்குப் பார்க்க எத்தனை சுழியம் ( 0 ) என்று தெரியாது கண்டியளோ!.

இனி இங்கு இவர்களின் திருக்கூத்தைப் பாருங்கோ.. தங்கள் வசதிக்கும் உழைப்புக்கும் ஏற்றவாறுதான் நல்லநாள் பார்த்துக் கொடுப்பார்கள். அதுவும் சனிக்கிழமையில் தான் அனேகமாக நடக்கும் ஏனென்றால் விடுமுறைநாட்களில்தான் அதிக மக்கள் கூடுவார்கள். அன்றுதான் நல்ல உழைப்பும் கிடைக்கும். உதாரணத்திற்கு தேர்த்திருவிழா சனிக்கிழமையில்தான் தேரும் உருளும் ஏனைய நாட்களில் உருளவே மாட்டாது.

இவற்றைவிட குடும்ப விழாக்கள் என்றால் பிள்ளைபிறந்து துடக்குக்கழிவில தொடங்கி சாமத்தியம், கலியாணம், மரணம், திதி, ஆண்டு நினைவு வீடு குடிபுகிர்தல், திருமண நிட்சயதார்த்தம், கார் வேண்டினால், சொத்துக்கள் வேண்டினால் இப்படி

அனைத்துக்குமே நம்மட ஆட்கள் ஐயரை கேட்டுச் செய்வதுடன் ஐயர்மார்களுக்கும் அள்ளிக் கொடுப்பார்கள். அதாவது அள்ளிக் கொடுப்பதிலும் பல வேறுபாடுகள். அதாவது வெளிநாடுகளில் பல சகோரதர்கள் இருந்து ஒரு நிகழ்வு நடத்துவதென்றால் ஒரு ஐயருக்கு ஒரு நாள் நிகழ்வுக்கு 500 - 2000 யூரோ வரையில அள்ளிக் கொடுப்பினம். வேறு யாருமல்ல நீங்கள்தான். ஊரிலுள்ளவர்களுக்கு உதவி செய்யக் காசுகேட்டால் நூற்றெட்டுக் கேள்விகள் வியாக்கியானங்கள். இதுவும் நீங்கள்தான்...

என்னுடைய நண்பன் ஒருவன் சொன்னான் ஒவ்வொரு ஐயர்மாரும் கோடீஸ்வரர்தான் என்று. இவன் கூறியது உண்மைதான் பாருங்கோ. அதாவது உதாரணத்துக்கு ஒரு ஐயர் ஒருநாளைக்கு ஒரு வைபவத்துக்குப் போனால் 1000 யூரோ கிடைத்தால் இலங்கைக்காசுக்குப் பெருக்கிப் பாருங்கோ. ஒருநாள் சம்பளம் 2 லட்சம். உண்மையில் எங்கள் நாட்டு ஜனாதிபதிக்கோ அல்லது வேறுநாடுகளின் அரச தலைவர்களுக்கோ இப்படி வருமானம் கிடைக்குமா? அதுவும் பிளைக்மணி (கறுப்புப்பணம்) இதை விட ஒரு ஐயருக்கு நாலு ஐந்து பிள்ளைகள் என்றால் இந்த நாடுகள் கொடுக்கும் சோசல் பணம்..ஒருக்கா கணக்குப் போட்டுப் பாருங்கோ..உங்களுக்குத் தலை சுத்தும்...

சரி இதுமட்டுமா. திருவிழாக்கள் வைபவங்கள் என்றால் அவர்கள் படித்துப் பாடமாக்கிய சமஸ்கிருதத்தை அப்படியே ஒப்புவிப்பார்கள். அடியார்களாகிய எங்களுக்கு ஒன்றுமே விளங்காது. அனைத்தும் பூச்சியமே (0) இவைகளை யார்தான் கேட்பார்கள் ஏன் தமிழில் பூசை செய்தால் எங்கட கடவுள்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களா?.. இவை அத்தனைக்கும் பொறுப்பாளிகள் நாங்கள்தான். கேள்விகள் கேட்காதவரை தவறுகள் நடந்துகொண்டுதான் இருக்கும் கண்டியளோ.

பிற சமயத்தவர்களைப் பாருங்கள் அவர்கள் வழிபாடு நடைபெறும் போது அவர்களின் சொந்த மொழியில் அமைதியாகவும் விளக்கமாகவும் கூறி அனைவரையும் நெறிப்படுத்துவார்கள். வாழ்வை பயனுள்ளபடி ஆக்குவார்கள், பிறருக்கு உதவ வைப்பார்கள் சமயகுருமாரும் அர்ப்பணிப்புடன் செய்வார்கள். இவர்களைப் பார்த்தாவது நாம் திருந்தவிட்டால் என்ன செய்வது மண்டையை சுவரில் இடியுங்கோ!..அப்ப போட்டு வாறன்!

## மரணச் செலவிற்கு......(படித்துச் சுவைத்தவர் -அழகு-London)

எங்கள் குடும்பத்தில் இப்படி இதுவரை ஒன்றும் நடக்கவில்லை இனிமேலும் வராமல் எல்லோரும் மிக கவனமாக இருப்பீர்களாக கிழே உள்ளதை வாசித்து புரிந்து கொள்ளவும். மனைவிக்காக பெற்றோர்களை ஒதுக்கிதீர்கள்!!! உண்மை சம்பவம்? தினமும் அலுவலகம் செல்லும் வழியில் ஒரு பெரியவர் வெய்யிலிலும், மழையிலும் பொம்மைகள் விற்றுக் கொண்டு இருப்பதைப் பார்த்து இருக்கிறேன்... நேன்று மாலை, குழந்தைக்கு ஒரு பொம்மை வாங்கலாம் என்று அவரிடம் ஒரு வெள்ளை நிற பூனை பொம்மை குடுங்கய்யா என்றேன். அவர் 80 ரூபாய் என்றார், பணக்கார கடைகளில் பேரம் பேசாமல் ஏழைகளிடம் தானே நாம் பேரம் பேசுவோம், அதுதானே சராசரி மனிதர்களின் இயல்பு...

அதனால் நான் என்னங்கைய்யா ஒரு குழந்தை பொம்மை 80 ரூபாயா, 70 ரூபாய்க்கு குடுங்க என்றேன், அவர் என் கண்களை உற்றுப்பார்த்து இதை குழந்தைகளுக்கா வாங்குறீங்க என்றார் . நான் ஆமாம் என்றேன்.. அவர் கொஞ்சம் மெதுவான குரலில் சரி ரூ .70 குடுங்க என்றார் . அவர் கண்கள் லேசாக கலங்கியதை நான் கவனித்தேன்.. அது மனதை என்னவோ செய்ய.... ஏன் அய்யா என்னாச்சு, ஏன் அழறீங்கன்னு கேட்டேன், ஒன்னும் இல்ல சார் என்றார் , நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கேட்க, அவர் மெதுவாக சொல்ல ஆரம்பித்தார்.

என் பெயர் ஆவுடையப்பன் (77), என் மனைவியின் பெயர் பார்வதி (73) எங்களுக்கு 6 குழந்தைகள் மிகவும் ஏழ்மையான குடும்பம்.. மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் பிள்ளைகளை வளர்த்தோம், பலநாட்கள் நானும், மனைவியும் சாப்பிடுவது கூட இல்லை, இருப்பதை பிள்ளைகளுக்குக் கொடுத்து விடுவோம் . பலநாள் இரவு பட்டினி இருந்திருக்கிறோம். ஒரு நாள் கூட என் மனைவி இதற்காக என்னோடு சண்டை போட்டதில்லை.. பிள்ளைகள் எல்லாம் திருமணம் முடித்து அவரவர்கள் தனிகுடும்பமாகச் சென்று விட்டனர். எங்களுக்கோ தடுமாறும் வயது, அதனால் பெற்ற மக்களின் வீட்டில் போய் இருக்கலாம் என்ற எண்ணத்தில், மூத்த மகனிடம் விபரத்தைச் சொன்னேன்.

அதற்கு அவன், என்னால் இருவரையும் கூட்டிக் கொண்டு போய் வைத்து பராமரிக்க முடியாது, யாரவது ஒருவர் வரலாம் என்றான்.

அப்படி நான் மூத்த மகன் வீட்டிற்கும், மனைவி வேறு ஒரு மகன் வீட்டிற்கும் சென்றோம் வேறு வழியின்றி. 47 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த மனைவியை பிரிந்து தனிமையில் இருப்பது பிடிக்காமல் பல நாட்கள் அழுது இருக்கிறேன் . மனைவியின் நினைவுகள் மனதில் போராட இறுதியில் என் மனைவி இருக்கும் மகன் ஊருக்குச் சென்றேன். என் மனைவியிடம் சொன்னேன், நாம் இருவரும் ஒன்றாக வேறு எங்காவது போய் விடலாமா என்று, மனைவியும் அழுது கொண்டே சம்மதித்தாள். மகன்கள் வீட்டிலிருந்து நாங்கள் வெளியே வந்து ஒரு வருடமாகிறது. பிழைப்புக்காக நான் குழந்தைகளின் பொம்மைகளை நடந்து சென்று விற்கிறேன், தினமும் 80 ரூபாய் முதல் 100 வரை லாபம் கிடைக்கும், இதை வைத்துக் கொண்டு ஜீவனாம்சம் செய்து கொண்டுள்ளோம்,

இப்போது எனக்கு வயது 77 ஆகிறது, எப்போது வேண்டுமானாலும் நான் இறந்து போகலாம்.. வரும் 100 ரூபாய் வருமானத்தில் கொஞ்சம் மிச்சம் பிடித்து சேமிக்கிறேன், அது எங்கள் மரண செலவிற்க்கு, என் பிள்ளைகளுக்கு அந்த செலவுத் தொந்தரவுகூட வேண்டாம் என அதை மனைவியிடம் கொடுத்து வைக்கிறேன் . ஒரு நாள், இந்தப் பணம் எதற்கு சேமிக்கிறீர்கள் என்று என் மனைவி கேட்டாள். நம் மரணச்செலவிற்கு என்றேன், சத்தமாக கத்தி அழுது விட்டாள். இப்போது என்மனைவியின் பிரார்த்தனை, என் கணவர் மரணிக்கும் அதே நேரத்தில் எனக்கும் "மரணத்தைக் கொடுத்து விடு கடவுளே என்று" "என் பிரார்த்தனையும் அதுவே தான்" என்று அவர் சொல்லவும் , இதை கேட்டுக்கொண்டிருந்த நான் மனதால் நொறுங்கிப் போனேன்.

நீங்கள் இங்கே இருப்பது உங்கள் பிள்ளைகளுக்கு தெரியுமா என்றேன் ? அவர்களுக்குத் தெரியாது என்றார். எனக்கு மனம் கனத்துப் போனது. சாதாரண மக்களிடம்தான் எத்தனை எத்தனை வலிகள் மனதில் புதைந்திருக்கின்றன... சின்ன சின்ன வியாபாரிகளிடமும் பழக்கடைக்காரர்களிடமும் பேரம் பேசாமல் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு நம்மால் முடிந்த அளவு உதவி செய்ய வேண்டும் என்ற படிப்பினையை நான் இம் முதியவரிடம் உரையாடியதன் மூலம் தெரிந்து கொண்டேன்...! My Dear's please respect to your parents, protect your parents, save your parents, honour your parents, u follow this steps, your kids definitely follow to you. God bless you. கண்கலங்கினால் பகிரவும் தவறை குறைப்போம்..!

# நாமும் நாட்டு நிலவரமும்.....

(கலைவாணி ஏகானந்தராசா)

நாட்டில் விமர்சனத்துக்குரிய பல விடயங்கள் பரந்து விரிந்து கிடந்தாலும்
நாம் எம்மை பாதித்த வ ் ட ய ங் க ளை த் தா ன் விமர்சிப்பது வளமை. ஆனால் என் மனதை கவர்ந்த சில விடயங்களும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கடந்த பங்குனி சித்திரை மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நாம் நின்றபோது நாமே சமைத்து சாப்பிடவேண்டியநிலமை ஏற்பட்டது. கடைகளில் சாப்பிடுவது சுகாதாரமுமில்லை பணமும் வீண் விரயமாகும்
என்று எண்ணியதால் நாமே சமைப்பதற்கான சகல ஆயத்தங்களும் மேற்
கொண்டோம். எமக்கு விரும்பிய உணவை எமது உடல் நிலமைக்கு உகந்தவகையில் சமைத்து உண்டோம்.


ஆனால்
தினம் மூன்று நேர உணவையும் தயாரிப்பதானால் அதற்கான ஆயத்தங்கள் செய்யவேண்டும் . மா அவிக்கனும் தூள் தயார் பண்ணனும். பருப்புவகைகள் வறுத்து திரித்து வைக்கனும். அப்படியே சமையலறைக்குள் நேரம் போய்விடும். இது ஒன்றும் பெரிதல்ல ஆனால் பங்குனி வெய்யிலில் சமையலறையில் நிற்பது போல கொடுமை ஒன்றுமில்லை. ஆகவே சில நாட்களில் வெளியே போய் சாப்பிடலாம் என்று முடிவுசெய்தோம்.

அப்போது எமது கண்ணில் பட்டதுதான் திருநெல்வேலி
அம்மாச்சி கடை. உள்ளூராட்சி மன்றத்தினால் நடத்தப்படும் இந்த உணவகம் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே எனக்கு தோன்றியது. அனேகமான ம ர க் க றி வ கை க ள் காளான், கிழங்கு அனை த்தும் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத் தின் (Farm school)இல் இருந்தே பெறப்படுவதாக அறிந்தோம். மருந்தடிக்காத செயற்கைப் பசளை போடாமல் உற்பத்தி செய்யப்படுபவை.

காலை 7 மணியிலிருந்து மாலை 7 மணிவரை இயங்கும் இவ் உணவகத்தில் இரண்டு நேர சுழற்சிமுறை நேர அட்டவணைப்படி வேலை செய்கிறார்கள். காலை 7 மணியிலிருந்து மதியம்

7 மணிவரை அடுத்து ஒரு குழ. அங்கே எல்லா வேலைகளையுமே பெண்கள் மட்டுமே செய்கிறார்கள். திறந்த கட்டிடத்தில் 10 அல்லது 12 பெண்கள் வரிசையாக நின்று நாம் கேட்கும் உணவை எம் கண்முன்னே செய்து கொடுப்பது அங்கு சிறப்பான அம்சமாகும். ஒரு பெண்மணி ஒரு உணவை மட்டுமே செய்வார். சிலர் தோசையுடன் வடையும் செய்வார்கள் தேவையான பழ ரசத்தையும் எங்கள் கண்முன்னேயே பிளிந்து தருவார்கள். இதைவிட உடல் ஆரோக்கியத்துக்குரிய மூலிகை தேனீர்களும் ஆரோக்கியமான சரக்கு கோப்பி வகைகளும் உண்டு.

மதியத்தில் சாதம் குழைசோறும் உண்டு. மிக சிறப்பான காளான் சூப் மற்றும் மாமிசமற்ற கூழ் இராசவள்ளிக்கிழங்கு கழி போன்ற விடயங்களும் உண்டு. மாலையில் தேநீருடன் வடை சூசியம் பணங்காய் பணியாரம் எள்ளுருண்டை பகோடா பயிற்றம்பணியாரம் என்று பல பல. ஆகா சொல்லிக்கொண்டே போகலாம். இத்தனையும் சுவை மட்டுமல்ல மிக மிக குறைந்த விலையில் தான் அங்கு விற்பனை செய்கிறார்கள். வடை 20 ரூபா இடியப்பம் 8 ரூபா பிட்டு ஒரு குழல் 20 ரூபா (சம்பல், சாம்பாரு உட்பட) காளான் சூப் 50 ரூபா. வறியவர் கூட ஒரு நேரச் சாப்பாட்டுக்கு 50 ரூபா வுக்குள் சாப்பிடமுடியும். அனேகமான பல்கலைக்கழக மாணவர்களும் (எல்லா இனத்தவரும்) அங்கு வந்து உணவருந்துவதை பார்த்தேன். பாடசாலை மாணவர்கள் கூட உணவுப் பொட்டலத்தை வாங்கி பையில் வைத்துக்கொண்டு செல்வதையும் சில பெற்றோரே பாடசாலைக்கு எடுத்துச்செல்லும்





பாடசாலை மாணவர்கள் கூட உணவுப் பொட்டலத்தை வாங்கி பையில் வைத்துக்கொண்டு செல்வதையும் சில பெற்றோரே பாடசாலைக்கு எடுத்துச்செல்லும் பெட்டிகளில் பிள்ளைகளுக்கு உணவு கட்டி கொடுத்துவிடுவதையும் பார்த்தேன். தாய் தந்தை இருவரும் வேலைக்கு செல்லும் குடும்பங்களுக்கு எவ்வளவு சௌகரியமான விடயம் இது என்று சந்தோசப்பட்டேன்.

இன்னுமொரு விடயம் என்னவென்றால் அங்கு வேலை செய்பவர்கள் அனைவருக்குள்ளும் ஒற்றுமையைக் கண்டேன். இது மட்டுமல்ல உணவை பரிமாறும் போது அவர்களின் முகத்தில் தாய்மையைக் கண்டேன். ஒரு நாள் நான் பணம் கொடுக்க மறந்து அவசரமாக சென்று வண்டியில் ஏறியபோது என் கணவர் கேட்டார் "பணம் கொடுத்ததை தான் பார்க்கவில்லை" என்று. நான் திரும்ப ஓடிச்சென்று "மன்னித்துக்கொள்ளுங்கள் பணம் செலுத்தாமல் சென்றுவிட்டேன் நீங்கள் கேட்டிருக்கலாமே" என்றேன். அதற்கு அந்த அம்மா கூறினார் "அதிலென்ன உணவுதானே கொடுத்தேன், நீங்கள் ஏதோ அவசரத்தில் செல்கின்றீர்கள் போலும் என நினைத்தேன்"என்றார். அந்த இடத்தில் அவரை நான் மனிதர்களைவிட உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்தேன்.

இதே நிலமையில் உணவு விடுதியின் வாசலிலும் ஒருவரை பார்த்தேன். மாற்றுத் திறனாளி ஒருவர் சலவைத் திரவகம் விற்றுக்கொண்டிருந்தார். அவரிடம் சற்று பேசினேன். இந்த விற்பனையின் மூலம் கிடைக்கும் பணம் அவரின் வாழ்க்கைச்செலவுக்கு போதுமானதா என கேட்டபோது, ஆம் தனக்கு சம்பளம் தருவதுடன் விற்பனை அதிகமானால் (Bonus) சன்மானமும் தருவார்கள் என்றார். நான் அவரிடம் வேண்டுமானால் உணவு வாங்கி செல்பவர்களுக்கு தேவையான பெட்டிகளையும் சேர்த்து நீங்கள் விற்கலாமே? நான் உதவி செய்கிறேன் என்றேன். அதற்கு "இல்லை அம்மா நான் அவர்களிடம் சம்பளம் வாங்குகிறேன் ஆகவே அது தவறு" என்றார். அங்கு ஒரு மனிதத்தை கண்டேன்.

எமது மண்ணில் ஏழை எளியவர்களிடம் இன்னமும் நேர்மை வாழ்கிறது. பணம் படைத்தவர்களிடம்....???

அடுத்த இதழில் தொடரும்.....

# மனோச் ஜெகதீஸ்வரனின் பரதநாட்டிய அரங்கேற்றம்.....

(கலைவாணி.ஏகானந்தராஜா)

யேர்மனி கேர்பன் நகரில் அமைந்துள்ள ராஜேஸ் நர்தனாலய ஆசிரியர் பரதசூடாமணி கலைவித்தகர் துஷ்யந்தி ஜெகதீஸ்வரனின் செல்வப்புதல்வனும், மாணவனுமான மனோச் ஜெகதீஸ்வரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் 14.09.2019 அன்று கேர்பன் நகரில் மிக சிறப்பாக நடந்தேறியது.

சரியாக மாலை 3.30 மணிக்கு கலைஞர்கள் பிரதமவிருந்தினர் சிறப்பு விருந்தினர்களை திரு.திருமதி ஜெகதீஸ்வரன் தம்பதிகள் மண்டபத்துக்குள் அழைத்துவந்தனர். வரவேற்புரையை திரு ஜேகதீஸ்வரன் நிகழ்த்தினார். பின்னர் நிகழ்ச்சித் தொகுப்பை செல்வி. வேதிகா. ஜெகதீசன் டொச் மொழியிலும் செல்வன் யுத். துஷ்யந்தன் தமிழ் மொழியிலும் மிக அழகாக தொகுத்து வழங்கியிருந்தனர்.

மங்கலவிளக்கேற்றல் நிகழ்வைத் தொடர்ந்து சாமிநாதக்குருக்களால் சலங்கை பூஜை நடாத்தப்பட்டு ஆசிரியரின் கையால் மனேச்க்கு சலங்கை அணிவித்து நட்டுவாங்கம் செய்த மாணவர்களுக்கு தாளம் கையளிக்கப்பட்டது. இசைக்கலைஞர் சி.கண்ணன் அவர் தம் மகனுடன் இணைந்து விநாயகர் துதிப்பாடல் பாடினார். தொடர்ந்து புஸ்பாஞ்சலியும் பஞ்ச நடையில் அலாரிப்பும் ஆடியபோது அரங்கம் களைகட்டத்தொடங்கியது. கரகோசம் தொடர்ந்தது. அடுத்து கர்ணரஞ்சனி ராகத்தில் அமைக்கப்பட்ட கௌத்துவம் சற்று வித்தியாசமாக அமைந்திருந்தது. தாயின்மேல் பாடப்பட்ட சாகித்யத்துக்கு மனோச்சின் உணர்வுபூர்வமான அபிநயமும் விறுவிறுப்பான ஜதிக்கோர்வைகளும் அவையோர் கண் இமைக்க மறந்த நிலையை வெளிப்படுத்தியது. தொடர்ந்த ஜதிஸ்வரத்தில் ஜதிக்கேற்ற அடைவுகளும் தீர்மானங்களும் மனோச்சின் ஆற்றலை வெளிப்படுத்தியது.

அரங்கேற்ற நிகழ்வின் மகுடமான வர்ணமானது அரங்கேற்ற நாயகனின் முழுத்திறமையையும் எடைபோடக்கூடியதான அம்சமாகும். நிருத்தமும் நிருத்தியமும் கூடிய இவ்வுருப்படியை மனோச் 45 நிமிடங்கள் எந்த வித சலனமுமின்றி களைப்போ சோர்வோ வெளிக்காட்டாது முருகனின் திருவிளையாடல்களை சஞ்சாரி

பாவமாக வெளிப்படுத்திய திறமைக்கு அவையோரின் கரகோசமே சாட்சியாக அமைந்தது. வர்ணத்தின் திரி கால ஜதியை செல்வி டியானி இலாவகமாக நட்டுவாங்கம் செய்ய, வெவ்வேறு நடைகளில் தட்டுமெட்டுடன் மனோச்சின் பாதங்கள் பதிந்து அவரின் 10 வருட நடன பயிற்சியின் அளவுகோலாக அமைந்தது.





நீலாம்பரி ராகத்தில் அமைந்த வர்ணம் ஆதலால் வர்ணம் சற்று சோபிக்கவில்லை என்பது என் எண்ணம். ஆனாலும் வயலின் வித்வான் செல்வன் நிருஜன் ஜெகசோதி அந்த ராகத்தை கையாண்டவிதத்துக்கு ஒரு ஓ போடலாம். பிரசாந்த் பிரணவநாதன் மிக அற்புதமாக அழத்தமாக ஜதிகளை வாசித்து வர்ணத்துக்கு உயிர் கொடுத்தார் என்பதை மறுக்கமுடியாது. அடுத்து கௌரவ விருந்தினர் லண்டன் OFAAL பரீட்சை ஸ்தாபனத்தின் ஜேர்மன் பொறுப்பாளர் திரு.சிறீதரன் ரட்ணஸ்வாமி அவர்கள் உரையில்எமது பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வதே எமது நோக்கமாகும். அந்த அரும்பணியை துஷ்யந்தி ஆசிரியர் செய்துவருகிறார். அவருக்கு உறுதுணையாக அவரது கணவர் திரு.ஜெகதீஸ்வரன் அயராது உழைக்கிறார் என்று பாராட்டியதுடன் திரு.திருமதி துஷ்யந்தி ஜெகதீஸ்வரன் இருவரையும் திரு.திருமதி சாந்தி. சிறீதரன் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தனர்.

அடுத்து சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கவிமாமணி குகதாசன் இன்றைய கலாச்சார சீரழிவுகள் பற்றி கூறி வருத்தம் தெரிவித்ததுடன், தமிழர் நாம் பிள்ளைகளுக்கு தொழில்சார் கல்வியை கொடுத்தோமா? எமது கலாச்சாரத்தை புகட்டினோமா? எமது சாதனை என்ன? அம்மம்மாவின் பாடசாலை என்று கூறுமளவுக்க ராஜேஸ் நர்தனாலயம் மூன்றாவது சந்ததியினரிடம் கையளிக்கப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டியது. என்று தனது சிறப்புரையில் கூறியதுடன் ஆசிரியரையும் கணவரையும் அரங்கநாயகன் மனோச் மற்றும் நட்டுவாங்கம் செய்த மாணவர்கள் டியானி. ஜெகதீஸ்வரன், நிரோஷி. லக்வின்டர் ஆகியோரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

தொடர்ந்து பரதக்கலை பற்றிய சாகித்யத்துடன் அமைந்த கீர்த்தனை துஷ்யந்தி அவர்களின் மாணவி. நிரோஷியின் நட்டுவாங்கத்தில் மிக தாளக்கட்டுடன் அமைந்திருந்தது. நவரச பாவமும் வெளிப்பட்டது. அடுத்து ஷம்சானந்தி ராகத்தில் அமைந்த தாண்டவம் மிக அற்புதமாக அமைந்ததுடன் அனைவரினதும் பாராட்டையும் பெற்றது சிறப்பாகும்!....

## யேர்மன் சிவநெறிப் பேரவையின் 10ஆவது ஆண்டு நிறைவு......

(கலைவாணி.ஏகானந்தராஜா)

யேர்மன் சிவநெறிப்பேரவை பத்தாவது ஆண்டை நிறைவாகக்கொண்டு Dormagen பகுதியில் 15.09.2019 அன்று சிவநெறிச்சான்றிதழ் தேர்வும் தேவார திருமுறை ஓதல் தெரிவும் நடாத்தியிருந்தது. திரு.திருமதி சந்திரா.கோகுலன்இ திரு திருமதி கலாசிறீ.தங்கரத்தினராசா செல்வன் கலாரஞ்சன், டினோஜன் ஆகியோர் பணியாளர்களாக இணைந்து தெரிவுகளை நடாத்துவதற்கான ஒழுங்குகளை செய்திருந்தனர். பண்ணிசை ஓதல் தெரிவுகளை இசை ஆசிரியர்களான திருமதி விஜய லட்சுமி. போஜராஜசர்மா, கலைவாணி.ஏகானந்தராஜா, திருமதி மீரா. நித்தியானந்தன், ராமப்பிரியா செல்லத்துரை ஆகியோர் நடாத்தினர். காலை 9 மணிக்கு சமய ஆராதனை நிகழ்வுகளுடன் பரீட்சைகள் ஆரம்பித்து போட்டி நிகழ்வுகள் முடிந்த பின்னர் மதிய உணவும் வழங்கப்பட்டது. அன்றைய தெரிவுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் 17.11.2019 Dormagen ல் நடைபெற இருக்கும் சைவத் தமிழ் கலைவிழாவில் வழங்கப்படும் என அறிவிக்கப்கட்டது.

# 2019 இலங்கை அரசுத்தலைவர் தேர்தல்

## (2019 Sri Lankan presidential election)



இலங்கையின் புதிய ஜனாதிபதி

கோத்தபய ராஜபக்ஸ - இலங்கை பொதுசன முன்னணி

தேர்தல் முடிவுகள்:-

| | |
|---|---|
| கோட்டாபய ராஜபக்ஷ | 69,24,255 |
| சஜித் பிரேமதாச | 55,64,239 |
| ஏனையவர்கள் | 7,64,005 |

| | | |
|---|---|---|
| வாக்களிக்க தகுதிபெற்றவை | 1.53.33 337 | |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 1.32.52. 499 | 98.99 % |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1.35. 452 | 1.01 % |
| வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | 1.33.87. 951 | 87.31 % |

69 இலட்சம் வாக்குகளை அடிச்சு தூக்கிய கோத்தா

நடந்து முடிந்த எட்டாவது ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச 13 இலட்சத்து 60 ஆயிரத்து 16 மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

இதன்படி, கோத்தாபய ராஜபக்ச 16 மாவட்டங்களையும், சஜித் பிரேமதாச 6 மாவட்டங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

மொத்த வாக்குகள் (முக்கிய வேட்பாளர்கள்)

| | |
|---|---|
| கோத்தாபய ராஜபக்ச | - 6,924,255 |
| சஜித் பிரேமதாச | - 5,564,239 |
| அநுர குமார திஸாநாயக்க | - 4,18.553 |
| எம்.எல்.ஏஎம்.ஹிஷ்புல்லாஹ் | - 38,814 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | - 12,256 |

லெப்டினன்ட் கேணல் நந்தசேன கோத்தாபய ராஜபக்ச (Nandasena Gotabaya Rajapaksa) பிறப்பு: 20 யூன் 1949 இலங்கை படைத்துறையின் இளைப்பாறிய அதிகாரி ஆவார். இவர் 2005 நவம்பர் முதல் 2015 சனவரி வரை இலங்கைப் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஈழப்போரின்போது நாட்டின் பல இடங்களிலும் பணியாற்றிய பின்னர் 1992 ஆம் ஆண்டில் இராணுவத்தில் இருந்து இளைப்பாறினார். இவரது சகோதரர் மகிந்த ராசபக்ச 2005 ஆம் ஆண்டில் இலங்கை அரசுத்தலைவராக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, இவர் பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டார். மகிந்த ராசபக்ச 2015 சனவரியில் நடைபெற்ற அரசுத்தலைவர் தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து இவரும் பதவி இழந்தார்.

இவர் 2006 டிசம்பரில் விடுதலைப் புலிகள் நடத்தியதாகக் கருதப்படும் தற்கொலைத் தாக்குதலில் இருந்து உயிர் தப்பினார். இவர் 2019 இலங்கை அதிபர் தேர்தலில் 17-11-2019 இலங்கை பொதுசன முன்னணி சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்றார்

பிறப்பு யூன் 20, 1949 (அகவை 70) பிறந்த இடம் மாத்தறை,
பதவி இலங்கை இராணுவம்
சேவை ஆண்டு(கள்) 1971 - 1992 தரம் லெப்டினன்ட் கேர்ணல்
ஆணை கஜபா படைவகுப்பணி
ஜெனரல் சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
சமர்/போர்கள் முதலாம் ஈழப்போர், இரண்டாம் ஈழப்போர், நான்காம் ஈழப்போர்
விருதுகள் ரண விக்ரம பதக்கம், ரண சூர பதக்கம்
வேறு பணி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு செயலாளர் (2005 - 9 சனவரி 2015)

வன்னி தேர்தல் மாவட்டம் (வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்)
சஜித் பிரேமதாஸ - 1,74,739
கோட்டாபய ராஜபக்ஷ - 26,105
ஆரியவங்ச திஸாநாயக்க - 2,546
எம்.கே.சிவாஜிலிங்கம் - 1,295

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி)
சஜித் பிரேமதாஸ - 3,12,722
கோட்டாபய ராஜபக்ஷ - 23,261
எம்.கே.சிவாஜிலிங்கம் - 6,845
ஆரியவங்ச திஸாநாயக்க - 6,790

திரிகோணமலை
சஜித் பிரேமதாஸ - 1,66,841
கோட்டாபய ராஜபக்ஷ - 54,135

மட்டக்களப்பு
சஜித் பிரேமதாஸ - 2,38,649
கோட்டாபய ராஜபக்ஷ - 38,460

திகாமடுல்ல (அம்பாறை)
சஜித் பிரேமதாஸ - 2,59,673
கோட்டாபய ராஜபக்ஷ - 1,35,058

நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திகாமடுலை ஆகிய 6 தேர்தல் மாவட்டங்களில் சஜித் பிரேமதாச அமோக வெற்றிபெற்றுள்ளதுடன், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, பதுளை, அனுதராபுரம், பொலன்னறுவை, குருணாகல் மற்றும் புத்தளம் போன்ற 16 மாவட்டங்களில் கோத்தாபய ராஜபக்ஷ அமோக வெற்றிபெற்றுள்ளார்.

இலங்கையின் 3 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள கோத்தாபய ராஜபக்ஷ 17-11-2019 அன்று அனுராதபுரத்தில் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்தார்.இலங்கையின் 8வது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் சமூகம் ஒரு தரப்பிற்கும், பெரும்பான்மை சிங்கள சமூகம் ஒரு தரப்பிற்கும் ஆதரவு வழங்கியுள்ளமையை காண முடிகின்றது.

இலங்கை வாழ் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கியுள்ள அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பெரும்பான்மை சிங்கள மக்கள் பெருமளவிலான வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.கோட்டாபய ராஜபக்ஷ மீது தமிழ் தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்த போதிலும், வட மாகாணம் உள்ளிட்ட தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இந்த முறை வாக்களித்துள்ளதை காணமுடிகின்றது.

இலங்கையில் 30 வருட காலம் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் வன்னி நிலப்பரப்பிலேயே கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவுடன் இறுதியில் முடிவடைந்திருந்தது. 2009ல் முடிவுக்கு வந்த இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி யுத்தத்தின்போது பெருமளவில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தவர் என்று தமிழர் தரப்பால் பரவலான குற்றச்சாட்டுக்கு ஆளானவர் கோட்டாபய. இறுதிப் போர் நடந்தபோது பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் அவர். எனவே, அவருக்கு வாக்களிப்பதற்கு எதிராக தமிழர் தரப்பில் பரவலான எதிர்ப்புணர்வு நிலவியது. இந்த நிலையில், தமிழர்கள் சஜித் பிரேமதாஸ விற்கு அதிகளவிலான வாக்குகளை அளித்துள்ளனர்.

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நாட்டில் முஸ்லிம் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்த நிலையிலேயே இந்த தேர்தல் நேற்றைய தினம் நடைபெற்றது. குறிப்பாக இலங்கையில் முஸ்லிம்கள் அதிகளவில் செறிந்து வாழும் பகுதியாக கிழக்கு மாகாணம் திகழ்கின்றது. இந்த தேர்தலில் முஸ்லிம்களின் வாக்கு யாருக்கு என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்திருந்த நிலையில், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமது வாக்குகளை பெரும்பாலும் சஜித் பிரேமதாஸவிற்கே அளித்துள்ளதை காண முடிகிறது.

2009ல் முடிவுக்கு வந்த இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி யுத்தத்தின்போது பெருமளவில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தவர் என்று தமிழர் தரப்பால் பரவலான குற்றச்சாட்டுக்கு ஆளானவர் கோட்டாபய. இறுதிப் போர் நடந்தபோது பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் அவர். எனவே, அவருக்கு வாக்களிப்பதற்கு எதிராக தமிழர் தரப்பில் பரவலான எதிர்ப்புணர்வு நிலவியது. இந்த நிலையில், தமிழர்கள் சஜித் பிரேமதாஸவிற்கு அதிகளவிலான வாக்குகளை அளித்துள்ளனர்.

## நடைபெற்றுமுடிந்தஎட்டாவதுஜனாதிபதிதேர்தலில்கோத்தாபய ராஜபக்ச 16 தேர்தல் மாவட்டங்களை கைப்பற்றினார்.

கொழும்பு மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 727,713
சஜித் பிரேமதாச - 559,921
களுத்துறை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 482,920
சஜித் பிரேமதாச - 284,213
மாத்தளை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 187,821
சஜித் பிரேமதாச - 134,291
காலி மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 466,148
சஜித் பிரேமதாச - 217,401
அம்பாந்தோட்டை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 278,804
சஜித் பிரேமதாச - 108,906
குருநாகல் மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 652,278
சஜித் பிரேமதாச - 416,961
அநுராதபுரம் மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 342,223
சஜித் பிரேமதாச - 202,348
பதுளை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 276,211
சஜித் பிரேமதாச - 251,706
இரத்தினபுரி மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 448,044
சஜித் பிரேமதாச - 264,503
கம்பஹா மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 855,870
சஜித் பிரேமதாச - 494,671
மஹநுவர (கண்டி) மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 471,502
சஜித் பிரேமதாச - 417,355
மாத்தறை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 374,481
சஜித் பிரேமதாச - 149,026
புத்தளம் மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 230,760
சஜித் பிரேமதாச - 199,356
பொலனறுவை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 147,340
சஜித் பிரேமதாச - 112,473
மொனராகலை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 208,814
சஜித் பிரேமதாச - 92,539
கேகாலை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச - 320,484
சஜித் பிரேமதாச - 228,032

### சஜித் பிரேமதாச வெற்றிகொண்ட மாவட்டங்கள்-6

யாழ்ப்பாணம் மாவட்டம்
சஜித் பிரேமதாச - 3.12,722
கோத்தாபய ராஜபக்ச - 23,261
வன்னி மாவட்டம்
சஜித் பிரேமதாச - 1.74,739
கோத்தாபய ராஜபக்ச - 26,105
மட்டக்களப்பு மாவட்டம்
சஜித் பிரேமதாச - 238,649
கோத்தாபய ராஜபக்ச - 38,460
திருகோணமலை மாவட்டம்
சஜித் பிரேமதாச - 166,841
கோத்தாபய ராஜபக்ச - 54,135
திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டம்
சஜித் பிரேமதாச - 259,673
கோத்தாபய ராஜபக்ச - 135,058
நுவரெலியா மாவட்டம்
சஜித் பிரேமதாச - 277,913
கோத்தாபய ராஜபக்ச - 175,823

## இறுதியாக நடைபெற்ற 2018 உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல் முடிவு

| கட்சி | பெற்ற வாக்குகள் | வீதம் |
| --- | --- | --- |
| -இலங்கை பொதுசன முன்னணி (மகிந்தராஜபக்ஷ) | 50.06.837 | 40.47 % |
| -ஐக்கிய தேசிய முன்னணி (ரணில்விக்கிரமசிங்க) | 36.40.620 | 29.42 % |
| -சிறீலங்கா சுதந்திரக் கட்சி | 14.97.234 | 12.10 % |
| -மக்கள் விடுதலை முன்னணி (துஙீ) | 7.10.932 | 5.75 % |
| -சுயேட்சைகள் | 3.74.132 | 3.02 % |
| -தமிழ் தேசியக் கூட்டமைப்பு | 3.37.877 | 2.73 % |
| -சிறீலங்கா முஸ்லீம்கள் | 92.897 | 0.75 % |

---

## இதுவரை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களின் முடிவுகள்

| ஆண்டு | வெற்றிபெற்றவர் | வாக்குகள் | வாக்குவீதம் |
| --- | --- | --- | --- |
| 1- 1982- | ஜே.ஆர்.ஜெயவர்த்தனா | 34.50.811 | (52.91%) |
| | ஹெட்டர் கொப்பேகடுவா | 25.48.438 | (39.07%) |
| 2- 1988- | ரணசிங்க பிரேமதாஸ் | 25.69.199 | (50.43%) |
| | சிறீமாவோ பண்டாரநாயக்கா | 22.86.860 | (44.95%) |
| 3- 1994- | சந்திரிகா பண்டாரநாயக்கா | 47.09.205 | (62.28%) |
| | சிறீமா திஸ்ஸநாயக்கா | 27.15.283 | (35.91%) |
| 4- 1999- | சந்திரிகாபண்டாரநாயக்கா | 43.12.157 | (51.12%) |
| | ரணில் விக்கிரமசிங்கா | 36.02.748 | (42.71%) |
| 5- 2005 | மகிந்த ராஜபக்ஸ | 48.87.152 | (50.24%) |
| | ரணில் விக்கிரமசிங்கா | 47.06.366 | (48.43%) |
| 6- 2010 | மகிந்த ராஜபக்ஸ | 60.15.934 | (57.88%) |
| | சரத் பொன்சேகா | 41.73.185 | (40.15%) |
| 7- 2015 | மைதிரிபால சிறீசேனா | 62.17.162 | (51.28%) |
| | மகிந்த ராஜபக்ஸ | 57.68.090 | (47.58%) |
| 8- 2019 | கோத்தபாய ராஜபக்ஸ | 69.24.255 | (52.25%) |
| | சஜித் பிரேமதாஸ | 55.64.239 | (41.99%) |

# உப்பும் ஆபத்துத்தான்....

உப்பு அதிகம் உள்ள உணவு வகைகள் உடல் எடையை அதிகரிக்கும். போதுமான அளவு தண்ணீர் குடிக்காவிட்டாலும், நார்ச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடாவிட்டாலும் மலச்சிக்கலும் ஏற்படும். குடலைச் சுத்தப்படுத்தி, கழிவுகளை அவ்வப்போது வெளியேற்ற வேண்டியது ஆரோக்கியத்துக்கு பெரிதும் உதவும். அதனால் அன்றாட உணவில் முழு தானியங்கள், நார்ச்சத்துள்ள பழங்கள், மரக்கறிகள் என்பன அவசியம் இடம்பெற வேண்டும்.

ஆனால் அரிசி, கிழங்கு வகை போன்ற மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகள் ஆற்றலுடன், நீர்ச்சத்தையும் உடலில் சேமித்து வைக்கக் கூடியவை என்பதை மறந்துவிட முடியாது. இவ்வாறு சேமித்து வைக்கப்படுபவை தான் அதாவது ஒவ்வொரு கிராம் கார்போஹைட்ரேட்டுடன் 3கிராம் நீர்ச்சத்தும் சேமித்து வைக்கப்படும். இதுவும் உடல் எடையை அதிகரித்துக் காட்டும்.. அத்தோடு ஹோர்மோன்களும் உணவு வகைகளும் கூட எடையை பாதிக்கலாம்.

அதேநேரம் மனநல பிரச்சினைகள், குழந்தையின்மை போன்றவற்றுக்கு பாவிக்கும் மருந்துகளும் கூட உடல் எடை அதிகரிக்க வழிவகுக்கலாம். கடுமையான ஒவ்வாமை காரணமாக வயிற்று உப்புசமும், கனத்த உணர்வும் ஏற்படும். இதன் விளைவாகவும் உடல் எடை அதிகரிக்கலாம். ஆனாலும் மதுப்பழக்கம் காணப்படின் கொழுப்பு உடைகின்ற செயல்பாடு சீராக இடம்பெறாது. மரக்கறிகள், பழங்கள், மசாலா பொருட்கள், நிறத்துக்காக உணவில் சேர்க்கப்படும் பொருட்கள் போன்றவற்றிலும் இரசாயனங்கள் இருக்கின்றன. இவற்றின் பயன்பாடு ஹோர்மோன்களின் இயக்கத்தை பாதித்து, எடையில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

ஆனால் தடையில்லாத, ஆழ்ந்த உறக்கம் எடையைக் குறைக்க பெரிதும் உதவும். அப்படிப்பட்ட தூக்கம், உடலையும் மனதையும் சீரமைக்கும். குருதியில் குளுக்கோஸின் அளவைச் சமநிலையில் பேணும். குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி, உடல் எடை அதிகரிக்காது காக்கும். சிறந்த தூக்கத்துக்குக் காரணமான மெலட்டோனின் ஹோர்மோன் சுரப்பு அதிகரிப்பதற்கு கையடக்கத் தொலைபேசி, மடிக்கணினி என்பவற்றின் பாவனையையும் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக படுக்கை அறையில் வெளிச்சம் ஊடுருவுவதைத் தவிர்க்க அடர்நிற திரைச்சீலைகளைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக உடல் எடை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

# பிரமிப்பூட்டிய பிரமாண்டம்"ஆவணகம்" கண்காட்சி....

(ஏலையா முருகதாசன்)

கடந்த 13.10.19 அன்று யேர்மனி முன்சன் நகரில் அன்ரன் யோசப் அவர்களால் இதுவரை காலமும் சேகரிக்கப்பட்ட தமிழ், சிங்கள, ஆங்கில நூல்களினதும், இலங்கை இந்தியா உட்பட அனைத்து நாடுகளிலும் பயன்பாட்டுக்கு இருந்து வந்த உலோக நாணயங்கள், பணத்தாள்கள், தமிழர் வரலாற்றினைக் கூறும் ஓலைச்சுவடிகள்,உலோக வீட்டுப் பாவனைப் பொருட்கள் ,பனையோலைப் பாவனைப் பொருட்கள் என பல தொன்மையான பொருட்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. யேர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் இக்கண்காட்சி இடம்பெற்று அதன் தொடர்ச்சியான 50 வது காட்சிப்படுத்தல் யேர்மனி முன்சன் நகரில் கடந்த 13-10-2019 அன்று இடம்பெற்றிருந்தது.

இக்கண்காட்சியை நாங்கள் பார்வையிட்ட போதும் சரி, அந்நினைவில் மூழ்கியிருக்கும் இப்பொழுதும் சரி, இது தொடர்பாக பலருடன் கலந்துரையாடும் வேளைகளிலும் சரி ஒரு தனிமனிதனால் இது எப்படிச் சாத்தியமானது என்ற பிரமிப்பு எம்மை விட்டு நீங்கவில்லை.



விருப்பத்துடன் செய்யும் எந்த வேலையும் வெற்றியை மட்டுமல்ல சமூகத்திற்கு அது அவசியமென்பதையம் வெளிக்காட்டும். எவ்வளவு தூரமென்றாலும் ஆங்காங்கே நடைபெறும் விழாக்களில் விழா நடத்தபவர்களின் வேண்டுகோளை ஏற்று எவ்வளவு தூரமென்றாலும் ரயிலில் பயணம் செய்து தன்னால் சேகரிக்கப்பட்ட பொக்கிசங்களை காட்சிப்படுத்திய செயல் பாராட்டுக்குரியது மட்டுமல்ல தமிழர்களால் நன்றி பாராட்ட வேண்டிய செயலுமாகும்.

விழாக்கள் நடக்கும் பொழுதெல்லாம் தனது கண்காட்சியிலேயே கவனமாக இருக்கும் அன்ரன் யோசப் எப்பொழுதும் புன்முறுவல் பூத்தபடியே இருப்பார். இது எமக்கு வியப்பைத்தரும் செயலாகும். நெடுந்தூர ரயில் பயணம் சேகரிக்கப்பட்ட பொக்கிசத்தின் சுமை என எல்லாவற்றையும் களை பாராது கொண்டு வந்து காட்சிப்படுத்துவது சாதாரண விடயமல்ல. எப்படி இவர் காட்சிப்படுத்தியலின் நிறைவு இறுதிவரை மலர்ந்த முகத்துடன் இருக்கிறார் எனப் பலமுறை நான் வியந்தது உண்டு.

ஆவணகம் என்ற இந்த பொக்கிச நூல்நிலையத்தை ஒரு நிறுவனம்கூட நடத்துவது சுலபமான காரியமல்ல.இதனை அறிந்தும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தும் 50வது காட்சிப்படுத்தலில் பல அறிஞர்கள் தொட்டு அரசியல்வாதிகள்வரை அன்ரன் யோசப்பைப் பாராட்டி மகிழ்ந்தனர்.



நோர்வேயின் முன்னால் வெளியுறவுத்துறை அமைச்சரும், இலங்கைக்கான முன்னால் தூதவருமான எரிக்சொல்கைம்,இலங்கை வானொலி தொட்டு பிபிசி வரை பணியாற்றிய ஊடகவியலாளர் விமல் சொக்கநாதன் அவர்கள்,கனடாவைச் சேர்ந்த, மானிடவியல் - குற்றவியல்- ஊடகவியல் ஆகிவற்றிற்கான பேராசிரியரும் கவிஞரும் புதுக்கவிதை தந்த மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் மகன் சேரன் அவர்களும், நாடகவியலாளர் ஊடகவியலாளர் திரு.தாசியஸ் அவர்கள், யாழ்ப்பண நூல் நிலையம் எரிக்கப்பட்ட காலகட்டத்தில் பணியாற்றிய திருமதி.ரூபாவதி அவர்கள் முள்ளிவாய்க்கால்வரை தனது உயிரையும் மதியாமல் வைத்தியராகக் கடமையாற்றிய வைத்தியர் சத்தியமூர்த்தி இன்னும் பலர் இக்கண்காட்சிக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

பெருந்தொகையான சிங்களச் சகோதரர்களும் இச்செயல்பாட்டில் இணைந்து செயல்ப்பட்டமை பாராட்டுக்குரியதாகும். இவ்விழாவில் நடனம், இசை நிகழ்ச்சி என்பனவற்றுடன் சிங்களப் பாடல் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. ஆவணகம் என்ற சொல்லுக்குள் முப்பொருள் பொதிந்து உள்ளனதைக் காணலாம். ஆவணம் ஒரு வரலாற்றை பதிவு செய்யும் நிரூபணம். "ஆவணகம்" அன்ரன் யோசப் அவர்களைப் பாரட்டுகிறேன்!...



# தமிழனே அறிவியலின் முன்னோடி...

ஆங்கிலேயர்கள் வந்துதான் கல்வி கற்பிக்கப்பட்டது என்பது சுத்த மடத்தனம்... ஆங்கிலம் கற்றோம் அவ்வளவுதான்... நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.. *Civil Engineering* தெரியாமல் தஞ்சை பெரிய கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவில், கரிகாலனின் கல்லணை கட்டமுடியுமா? சிதம்பரம் நடராஜா கோவிலில் ஒரே இடத்தில் சிவனையும் நாராயணனையும் பார்க்கும்படி வைத்து மனிதனின் நாடி, நரம்புகள், மூச்சுக்காற்று உள்ளடக்கி தங்க ஓடுகள் ஊசிகள் பதித்தான்..

இன்னும் இது போன்ற எத்தனையோ கட்டிடகலை.. தெரியாமல் கட்ட முடியாது.! *Marine Engineering* தெரியாமல் சோழர்கள் கடல் கடந்து வாணிபம் செய்திருக்க முடியாது. *Chemical Engineering* தெரியாமல் இரசவாதம், மற்றும் மூலிகை வைத்தியம் கண்டறிந்திருக்க முடியாது. *Aero Technology* தெரியாமல் கோல்களை ஆராய்ந்திருக்க முடியாது. *Mathematical* தெரியாமல் கணக்கதிகாரம் படைத்திருக்க முடியாது, ஜோதிடம், பஞ்சாங்கம் படைத்திருக்க முடியாது. *Explosive Engineering* தெரியாமல் குடவறை கோவில்கள் படைத்திருக்க முடியாது. *Metal Engineering* தெரியாமல் ஆயுதங்கள், உபகரணங்கள், ஆபரணங்கள் படைத்திருக்க முடியாது.

*Anatomy* தெரியாமல் சித்த மருத்துவம் செய்திருக்க முடியாது. *Neurology* தெரியாமல் நாடி வைத்தியம் பார்த்திருக்க முடியாது. *Psychology* தெரியாமல் Telepathyia செயல்படுத்தியிருக்க முடியாது. *Bachelor/ Master of Arts* தெரியாமல் தமிழ் இலக்கியங்கள் படைத்திருக்க முடியாது. *Business Administration* தெரியாமல் கடல் கடந்து வாணிபம் செய்திருக்க முடியாது. *Chartered Accounts* தெரியாமல் வரி வசூலித்து திறம்பட ஆட்சி செய்திருக்க முடியாது.

*Anomaly Scan / Target Scan* இல்லாமல் குழந்தைகளின் வளர்ச்சியை கணக்கிட முடியாது. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கர்ப்பம் தரித்த மூன்றாவது மாதத்திலிருந்து, பத்தாவது மாதம் குழந்தை பிறப்பதுவரை எப்படியிருக்கும் என்று பல்லடம் , தாராபுரம் நடுவில் உள்ள குண்டடம் சிவன் கோவிலில், கல்லில் செதுக்கி வைத்துள்ளான் தமிழன்.

இன்னும் நீங்கள் என்ன என்ன அறிவியல் பெயர் வைத்திருக்கிறீர்களோ, அத்தனைத் துறைகளிலும் சாதித்தவர்கள் நம் தமிழர்கள். நம் தமிழ்நாட்டின் பெருமையை அடுத்தவர் அறியச் செய்யுங்கள்.. நான் தமிழன் என்பதில் பெருமிதம் கொள்ளுங்கள்.. இன்னும் சொல்ல வேண்டுமானால், ஒட்டுமொத்த நவீன அறிவியலுக்கு திருமூலரின் ஒரேயொரு மந்திரம் போதும்... இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் Blood Test கிடையாது. லேப் டெக்னிஸ்யன் (LAB technicient ) படிப்பு கிடையாது. ஆனால் நம் உணர்ச்சி பெருக்கத்தில் இருந்து வரும் விந்துவில் மில்லியன் உயிர் அணுக்கள் இருப்பதாக இப்போது கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

அப்படி பல மில்லியன் உயிர் அணுக்கள் போராடி அதில் ஒன்று தான் கர்ப்பபைக்கு சென்று உயிர் உண்டாகிறது. இதை இப்போது 21 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்ததாகச் சொல்கிறார்கள்.. ஆனால், இதை நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, "திருமூலர் பெருமகனார்" அற்புதமாக தன் ஞானத்தினால், "லட்சமாக உருவெடுத்து" "ஆயிரம் ஆகி" "நூறாகி பத்தாகிப் பிறகு ஒன்றாகி உள்ளே சென்று உயிரெடுத்தது தான் உயிர்" என்று சொல்லியிருக்கிறார். எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவானது தமிழர் மரபும், கலாச்சாரமும், ஞானமும்.

## பொன்மொழிகள்....

1-அரிச்சந்திரன் பொய் பேசாமல் இருப்பதற்கு அவனுடைய வாய்மை மட்டும் காரணமல்ல, அவனிடம் துருவித் துருவி கேள்வி கேட்காத மனைவியும் காரணமாகும்.

2-இரக்கமும் உறக்கமும் அளவோடு இருக்க வேண்டும். உறக்கம் அதிகரித்தால் சோம்பேறி என்பர். இரக்கம் அதிகரித்தால் ஏமாளிகள் என்பர்.

3-நல்ல இதயங்களைப் பார்ப்பது கடினம், நல்ல இதயங்களுடன் பேசுவது அதிஸ்டம், நல்ல இதயங்களுடன் நட்பு வைப்பது வரம்.

# யேர்மனியில் பிரதான சமயங்கள்....

மனிதனின் சமாதான, அமைதி, ஒழுக்க வாழ்வுக்கு மதங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம் மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றினாலும் கட்டுப்பாட்டான ஒழுக்க வாழ்வுக்கு இந்த மதங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. பல ஆண்டுகளின் முன்பு இந்த மதங்களும் சமயங்களும் ஆட்சி செய்து வந்திருப்பதையும் நாம் அறிவோம். எப்படி மனிதரை நல்வழிப்படுத்தினாலும் மதம் சார்ந்த முரண்பாடுகளும் போர், உள்நாட்டுப் போர்களும் இன்றுவரை பல நாடுகளில் தொடர்ந்து வருவது வேதனைக்குரிய விடையமாகும்.

யேர்மனியைப் பொறுத்த அளவில் மத முரண்பாடுகள் மிகக் குறைவு என்றே கூறலாம். சுமார் 82 மில்லின் சனத்தொகை கொண்ட இந்த நாட்டின் சமயம் சார்ந்த ஒரு புள்ளி விபரத்தை இங்கே பார்ப்போம். இங்கு கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து என இரு சமயங்கள்தான் பிரதான சமயங்களாகக் காணப்படுகின்றன.
2018ம் ஆண்டு முடிவில் எடுக்கப்பட்ட புள்ளிவபரங்களே இங்கு தரப்படுகின்றன.

1-கத்தோலிக்க மதத்தவர்களின் எண்ணிக்கை
2004 ஆண்டில் 26.0 மில் - 2018 ஆண்டில் 23.3 மில்
புரட்டஸ்தாந்து மதத்தவர்களின் எண்ணிக்கை
2004 ஆண்டில் 25.6 மில் - 2018 ஆண்டில் 21.5 மில்
ஏனைய மதத்தவர்கள் - 2018 ஆண்டில் 02.4 மில்

இப்புள்ளி விபரத்தின்படி சமயங்களைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதைக் காணலாம்.

2-விபரம் (தேவாலயங்களில்) கத்தோலிக்கர் - புரட்டஸ்தாந்தினர்

| | |
|---|---|
| மரணஅடக்கம் செய்யப்பட்டவர்கள் | |
| | 2010-2.53.000 பேர் - 2.93.000 பேர் |
| | 2018-2.44.000 பேர் - 2.72.000 பேர் |
| ஞானஸ்ஞானம் பெற்றவர்கள் | 2010- 1.70.000 பேர் - 1.93.000 பேர் |
| | 2018-1.68.000 பேர் - 1.84.000 பேர் |
| திருமணம் செய்தவர்கள் | 2010- 49.000 பேர் - 52.000 பேர் |
| | 2018- 43.000 பேர் - 44.000 பேர் |

3- தேவாலயங்களுக்குரிய வருமானம் மக்களின் உழைப்பில் ஒரு பகுதியாகவும் அன்பளிப்புகளுமாகக் கிடைக்கின்றன.

கத்தோலிக்க தேவாலயங்களுக்குக் கிடைத்த வருமானம்

| | | | |
|---|---|---|---|
| 2004 | ஆண்டில் | 4.03 | பில்.யூரோ |
| 2018 | " | 6.43 | " |

புரட்டஸ்தாந்து தேவாலயங்களுக்குக் கிடைத்த வருமானம்

| | | | |
|---|---|---|---|
| 2004 | ஆண்டில் | 3.69 | பில்.யூரோ |
| 2018 | " | 5.67 | " |

4-தேவாலயங்களின் வழிபாட்டிற்குச் செல்பவர்கள்

| | கத்தோலிக்கர் | | - புரட்டஸ்தாந்தினர் | |
|---|---|---|---|---|
| -அரிதாகச் செல்பவர்கள் | 34 | வீதம் | 43 | வீதம் |
| -கிரமமாகச் செல்பவர்கள் | 28 | " | 28 | " |
| -செல்லாதவர்கள் | 14 | " | 17 | " |
| -மாதத்தில் 3 தடவைகள் செல்பவர்கள் | 14 | " | 08 | " |
| -கிழமைக்கு 1 " " | 10 | " | 04 | " |

| | | | | |
|---|---|---|---|---|
| 5-கத்தோலிக்க பாதிரிமார் எண்ணிக்கை | 2000 | ஆண்டில் | -17.129 | பேர் |
| | 2018 | " | -13.560 | " |
| கத்தோலிக்க சமூக அமைப்புகள் | 2000 | " | -13.241 | |
| | 2018 | " | -10.191 | |
| புரட்டஸ்தாந்து பாதிரிமார் எண்ணிக்கை | 2000 | " | -12.000 | பேர் |
| | 2018 | " | -10.800 | " |
| புரட்டஸ்தாந்து சமூக அமைப்புக்கள் | 2000 | " | -13.908 | |
| | 2018 | " | -12.600 | |

6-யேர்மனியில் வருடாந்தம் அதிக வருமானம் பெறும் பங்குகளைப்பார்த்தால்.. 2018ம் ஆண்டில் பெற்ற அன்பளிப்புகளில் முதல் மூன்று இடங்கள்..

| | | |
|---|---|---|
| Paderborn | -4.4 | Bil.Euro |
| Köln | -3.7 | " |
| München-Freising | -3.4 | " |

7-யேர்மனியில் 2018 ஆண்டில் மொத்தமாக 45.600 தேவாலயங்களும் 2.803 பள்ளிவாசல்களும் காணப்பட்டன.

-கத்தோலிக்க தேவாலயங்கள் - 24.500

-புரட்டஸ்தாந்து தேவாலயங்கள் - 21.100

-இஸ்லாமிய பள்ளிவாசல்கள் - 2.803

# 49 ஆவது இலக்கியச்சந்திப்பு - வன்னி

வன்னி மண்ணில் இலக்கியச் சந்திப்ப- 49 நிகழ்வு 2019 செப்டெம்பர் 21, 22ஆம் திகதிகளில் சிறப்பாக நடந்தேறியது. இலங்கையில் இடம்பெற்ற நான்காவது சந்திப்பு இது. இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்கள் கலைஞர்கள் இலக்கிய ஆர்வலர்களால் 1988ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த இலக்கியச் சந்திப்புத் தொடர் ஜேர்மனியில் உள்ள ஹேரண நகரில் முதலில் இடம்பெற்றது. தொடர்ந்து இந்த இலக்கியச் சந்திப்புக்கள் பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு நகர்களில் இடம்பெற்றுள்ளன. அனேகமான சந்திப்புக்கள் ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்றன.

இலங்கையில் முதன்முதலில் 41ஆவது சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய இடங்களிலும் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்பில் குவர்னிகா என்ற இலக்கியச்சந்திப்பு மலரும் வெளியிடப்பட்டது வன்னியில் இடம்பெற்ற 49ஆவது சந்திப்பில் பங்குபற்றவென பல்வேறு நாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், பெண்ணிலைவாதிகள், திரைப்படக்கலைஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப்பலரும் வந்திருந்தனர். முதியவர்களைவிட இளையவர்களே அதிகமாகக் காணப்பட்டனர். நிகழ்வில் சில சிங்கள கலை இலக்கியவாதிகளையும் ஊடகவியலாளர்களையும் காணமுடிந்தது.

ஜேர்மனி, நோர்வே, பிரான்ஸ், லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தும் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர். 100க்கும் கூடுதலான பேராளர்கள் இந்தச் சந்திப்பு நிகழ்வில் பங்குபற்றினர். பின்வரும் 15 தலைப்புகளில் கருத்தாடல்கள் இடம்பெற்றன: (1) வன்னி : நிலம், சமூகம் (2) வறுமையின் நிறம் பச்சை : பிரதிகள் காட்டும் வழி? (3) வன்னிக்காடு : அன்றும் இன்றும் (4) முஸ்லிம் சமூகமும் சமகால நெருக்கடிகளும் (5) அந்தரிப்புக்குள்ளானோரும் சமூகத்தின் பொறுப்பும் (காணாமலாக்கப்பட்டோர் மற்றும் போரில் இழப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்தோர் பிரச்சினை). (6) இலக்கிய அரசியல்: உண்மையும் விடுபடலும் 7) பிரதிகளில் இயற்கை, சூழல் உயிரினங்கள் (வரலாற்றுச் சித்தரிப்பும் புதிய உணர்தல்கள்

(8) போருக்குப் பிந்திய ஈழ இலக்கியம், பத்திரிகைகள் கச்சாப் பொருள், சந்தை, பதிப்பு முயற்சிகள் (9) ஊடக சுதந்திரத்தில் தமிழ்ப்பத்திரிகைகளின் நிலை - ஒரு வாசக நிலை நோக்கு(10) ஈழ அகதிகள் தமிழகத்திலும் தமிழகத்திலிருந்து ஈழத்திலும் (11) போருக்குப் பின்னரான சிறுகதைப் பிரதிகள் மீதான வாசிப்பும் புரிதலும் (12) தெய்வம், சடங்கு, மரபு: வன்னி நிலமும் கையளிப்புகளும் (13) வரலாற்றின் பயண வழியில் மக்கள் பண்பாடும் போர்ச் சுவடுகளும் (14) மரபும் நவீனமும்: மன்னார்ப் பண்பாட்டு இடையசைவுகள் (15)திரையும் நிஜமும்.

மேலே குறிப்பிட்ட விடயங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் உரைஞர்கள் 5 நிமிடங்கள் உரையாற்றினர். அதன்பின் 45 நிமிட நேரம் கருத்தாடல்களுக்காக ஒதுக்கப்பட்டது. சபையோர் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். ஒவ்வொரு விடயத்தைப்பற்றியும் 15 பேருக்குக் குறையாதவர்கள் கலந்துரையாடலில் பங்குபற்றினர். சிலர் கேள்விகள் எழுப்பி அவற்றிற்கான பதில்களைப் பெற்றனர். வேறுசிலர் தமது கருத்துக்களை முன்வைத்தனர். ஒவ்வொரு விடயத்தைப்பற்றியும் மிக ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. அதுவே இந்த இலக்கியச்சந்திப்பு நிகழ்வின் வெற்றி என்று திடமாகக் கூறலாம்.

இந்த இலக்கியச் சந்திப்பில் இடம் பெற்ற உரைகள் கையேடுகளாக வழங்கப்பட ஆவனசெய்தால் அது ஒரு பயன்மிக்க செயற்பாடாக அமையும். இந்தக்கருத்தாடல்களில், போருக்குப்பின்னரான சமூகப் பிரச்சனைகள் சில ஆராயப்பட்டிருந்தால் இந்தச் சந்திப்பு நிகழ்விலும் சிறப்பாக அமைந்திருக்கும். குறிப்பாக தமிழர் பிரதேசங்களில் இராணுவ பிரசன்னம் அதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கையகப்படுத்தப்பட்ட தமிழ்மக்களின் விவசாய நிலங்கள், சிறைவாசம், போரில் கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் போராளிப் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை போன்ற இன்னோரன்ன விடயங்களை விவாதப் பொருளாக்கியிருக்கலாம். அடுத்த இலக்கியச்சந்திப்பு நோர்வே நாட்டில் நடத்துவதற்கான தீர்மானமும் அங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பௌதிக வளங்கள் குறைவான வன்னிப் பிரதேசத்தில் ஒரு சிறப்பான இலக்கியச்சந்திப்பை முன்னின்று நிகழ்த்திய கவிஞர் கருணாகரன் உள்ளிட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

# இலங்கை அரச இலக்கிய விருது விழா...

2019ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

2018ஆம் ஆண்டில் தமது சிறந்த படைப்புக்களினால் இலக்கியத் துறைக்கு பங்களிப்பு வழங்கிய எழுத்தாளர்களின் சேவைகளை பாராட்டி இந்த அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமிழ், சிங்களம், மற்றும் ஆங்கில மொழிமூல இலக்கியப் படைப்பாளர்கள் மூவருக்கு வாழ்நாளில் ஒரேயொரு தடவை மாத்திரம் வழங்கப்படும் "சாகித்ய ரத்னா" கௌரவ விருது ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது.

இதற்கிணங்க சிங்கள மொழிக்காக பேராசிரியர் வோல்டர் மாரசிங்க, தமிழ்மொழிக்காக ஐயாதுரை சாந்தன், ஆங்கில மொழிக்காக கமலா விஜயரத்ன ஆகியோருக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. அரச இலக்கிய விருது விழாவில் சிறந்த சுய சிறுவர் இலக்கியத்திற்கான விருது "அம்மா கோழியும் அப்பா சேவலும்" நூலுக்காக செபமாலை அன்புராசாவுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த சுய இளையோர் இலக்கிய விருது "சாமி தமிழ் அறம்" நூலுக்காக அருட்திரு ரீ.எஸ். யோசுவா,

சிறந்த மொழிபெயர்ப்பு கவிதை இலக்கியத்துக்கான விருது "சுதந்திரம்" என்ற நூலுக்காக கலாநிதி கந்தையா சிறீகணேசன்,

சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கிய விருது "மஹர தோரணம்" நூலுக்காக சாமிநாதன் விமல்

சிறந்த மொழிபெயர்ப்பு நாவல் இலக்கியத்திற்கான விருது "தாரா சியாமளி குமாரசாமி" என்ற நூலுக்காக அனுஷா சிவலிங்கம், சிறந்த மொழிபெயர்ப்பு நானாவித இலக்கிய விருது "மிகப்பெரும் ஆயுதக்களைவு" நூலுக்காக மு. பொன்னம்பலம்,

சிறந்த சுய நானாவித இலக்கியத்திற்கான விருது "எல்லாப்பூக்களுமே அழகுதான்" என்ற நூலுக்காக அ..ச. அகமட் கியாஸ்,

சிறந்த சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு இலக்கியத்திற்கான விருது "இலங்கையில் முஸ்லிம் கல்வி" சாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்" நூலுக்காக ஏ.எம். நஹியா,

சிறந்த சுய நாடக இலக்கியத்திற்கான விருது "மன வைரம்" நாடகத்துக்காக செல்லம் அம்பலவாணர்,

சிறந்த சுய கவிதை இலக்கியத்திற்கான விருது "முகிலெனக்கு துகிலாகும்" என்ற நூலுக்காக வ. வடிவழகையன்,

சிறந்த சுய சிறுகதை இலக்கியத்திற்கான விருது "கனவுலகம்" நூலுக்காக ஜுனைதா ஷெரீப்,

சிறந்த சுய நாவல் இலக்கியத்திற்கான விருது "அலுவாக்கரை" என்ற நூலுக்காக எஸ்.ஏ. உதயன்ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

'சாஹித்திய ரத்னா' வாழ் நாள் சாதனை'விருது ஐயாத்துரை சாந்தனுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாச, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பெர்னாட் வசந்த, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்ணான்டோ, இலங்கை கலா மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ஆரியரத்ன களுஆராச்சி, அரச இலக்கிய ஆலோசனை சபையின் தலைவர் பேராசிரியர் சமந்த ஹேரத் மற்றும் புத்திஜீவிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



# அமரர் சின்னத்தம்பி கிருஸ்ணகுமார்

## 400-00 யூரோ

மண் சஞ்சிகையின் வாசகரும் டியூஸ்பேர்க்கில் வாழ்ந்தவரும் மனிதநேயம் மிக்கவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையுமான இவர் கடந்த 04-09-2019 அன்று இறைவனடி சேர்ந்தார். இவரின் 31வது நாள் நினைவுதினம்(04-10-2019) அன்று தாயகத்தின் மன்னாரிலுள்ள முதியோர் இல்லத்தின் முதியோருக்கும் தலைமன்னாரிலுள்ள ஆதரவற்ற சிறுவர் இல்லத்தில் வசிப்போருக்கும் உணவு வழங்குவதற்காக இப்பணத்தை வழங்கினார்கள். அப்படியே அவர்கள் விரும்பியவாறு அன்றைய தினம் இரு இல்லத்தவர்களுக்கும் உணவு வழங்கப்பட்டது.

இந்த மனித நேய உதவியை வழங்கிய அன்னாரது பாரியார் திருமதி சுசிகலாவிற்கும் அவரது பிள்ளைகளுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற மண் சஞ்சிகையினரும் இறைவனை மன்றாடுகிறார்கள்.

-ஆசிரியர்-

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுக ளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா -480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00

05. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிநொச்சி - 480-00

07.செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு -240-00

08. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00

09. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 1-09-2019 மேலதிகச் செலவு - 192-73

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

07. திருமதி சுசிகலா கிருஸ்ணகுமார் - Duisburg + 400-00
(கணவனாரின் 31 வது நாள் நினைவு அன்பளிப்பு)


08. செல்வி லாவண்யா அற்புதராசா - Soest + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

09.செல்வன் ராகுல் துரையரங்கன் - Essen + 480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற வருடாந்த அன்பளிப்பு)

-------

+ 1157-27

| | | | |
|---|---|---|---|
| | | | + 1157-27 |
| அனுப்பியது:- | | | |
| (1) "செபமாலை" சிறுவர் பாதுகாப்பு இல்லம் | | | |
| தலைமன்னார் 200.00 + 480.00 | | -680-00 | |
| (2) "சாந்தோம்"முதியோர் இல்லம் | | | |
| மன்னார் | | -200-00 | |
| (3) திருஞான சம்பந்தர் குருகுலம் | | | |
| மட்டக்களப்பு | | -480-00 | |
| வங்கிக் கட்டணம் 4x10-00 | | - 40-00 | |
| | | -------- | |
| | | -1400-00 | |
| வங்கிவரி 01.09.2019 - 30.09.2019 | - 09-94 | | |
| 01.10.2019 - 31.10.2019 | - 12-30 | | |
| | ------ | | |
| | 22-24 | - 22-24 | |
| | | -------- | |
| | | - 1422-24 | 1422-24 |
| | | | -------- |
| 31-10-2019 மீதி கையிருப்பு (மேலதிகச் செலவு) | | | - 264-97 |
| | | | --------- |


ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUWARAR THIRUKOVIL

RECEIPT

Date: 24/09/2019

Received with thanks from Mr.Mrs.Miss MR. V. SIVARASA of

Address "MANN" (ERDE) MAGAZINE - GERMANY

Rupees Four Hundred Eighty Euro.

Bank ... Cheque No ... Date ...


89209186.(R-S)

Rs. 480 Euro

18006

S. ...

Manager



Sisters of Charity

"Shantham"
Home for the Elders
Mannar
Sri Lanka

07.10.2019

SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSIO

செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்ல

டொமினிக்கன் கன்னியர் மடம்,
துள்ளுக்குடியிருப்பு,
பேசாலை,
இலங்கை.

Dominican Convent,
Thulukkudiruppu,
Pesalai,
Sri Lanka.

Date: 28 / 09 /2019

அன்புள்ள நலன்விரும்பிகளுக்கு!
அவர்களுக்கு அருட்சகோதரி யூலியஸ் ஆகிய நான் அறியத்தருவது சகாயநாதன் கதிர்விழி என்பவர் செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லத்தில் எமது பராமரிப்பிலேயே வசித்து வருகின்றார்

இவர் தற்போது தரம் 6ல் கல்வி பயில்கின்றார் இவருடைய தந்தை யுத்தம் காரணமாக இறந்து விட்டார்.இவருடைய தாயார் குடும்ப வறுமை காரணமாக தற்கொலை செய்து இறந்து விட்டார்.இதன் காரணமாக இவரும் இவருடைய அக்காவும் எமது பராமரிப்பிலேயே எமது இல்லத்தில் இருந்தே கல்வி கற்கின்றனர் என்பதை தெரிவித்து கொள்கின்றேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள

Sr. Julius

REV.SR.MARIYA JULIUS MARIMPILLAI, O.P
SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSION
DOMINICAN CONVENT
THULUKKUDIRUPPU
PESALAI
MANNAR



# இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
# හින්දු අන්පහම ළමා නිවාසය
# Hindu Anpakam Children Home

[illegible]
[illegible]
Parentless Children Pity Rescue, Protect Them.

பதிவு இல: NEP/DS/V/SS/331
Regd No : HA/04/V/24

E-mail hinduanpakam@gmail.com | தொ.இல T.P. : 0094 024-2223683 | 2ம் மைல் கல், மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. | 2nd Mile Post, Mannar Rd, Veppankulam, Vavuniya.

President
Miss.K.Jeyarany
Vice Presidents
Mr.K.Kirupagaran
Mrs.S.Rajini
Secretary
Mrs.S.Niranjana
Treasurer
Mr.M.Kathirkamarajah
Asst Secretary
Mr.G.Sriskantharajah
Asst Treasurer
Mrs.T.Rathimalar
Board of Members
Mr.S.Sabanathan
Mr.M.S.Selvarajah
Mr.T.KuruKulasingam
Mr.K.Uthayakumar
Mr.S.Santhirakumar
Mr.K.Kanesarajah
Mr.E.Tharmapalan
Mr.M.Jegan
Mr.S.Raveendran
Mrs.K.Santhiraleela
Mrs.J.Thadsayini
Mrs.S.Nirmala
Patron
Mr.V.S.Thevarajah
Mr.Dr.Ramachchandran
M.S.Subramaniyam
Bank / A/c / details
032020254291
Hatton National Bank
Vavuniya
Contact
024 222 3683
077 6143628
E.Mail
hinduanpakam@gmail.com

வ.சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.
24.09.2019.

அன்புடையீர்,

நாம் அனைவரும் இறைவன் ஆசியுடன் நலமுடனே உள்ளோம். தங்கள் நலத்திற்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம், அத்துடன் தாங்கள் அனுப்பிய மின்னஞ்சல் கிடைத்தது. தாங்கள் அனுப்பிய பணம் தொடர்பான விபரங்களை தங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கின்றோம்.

நன்றி.

தலைவர்,
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்,
வேப்பங்குளம்,வவுனியா.

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them

**HINDU ANPAGAM**

Veppankulam, Vavuniya - Sri Lanka

T.P : 024-2223683

திகதி : 25.09.2019.

திரு/திருமதி/செல்வி : [illegible] (ஜேர்மனி)

விபரம் : "மண்" [illegible]

[illegible]

நடைபெறும் திகதி : —

பணம் ரூபா : [illegible]

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

ரூபா : 72,641.25 | 081 | இங்ஙனம் [illegible] பொருளாளர்

# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center
# හින්දු ඇන්පකැම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

பதிவு இல. NP/30/23/04/02
NEP/D5/V/SS/111
Reg No : HA/04/V/24

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
[illegible]
Parentless Children Pity Rescue, Protect Them.

E – mail
hinduanpakam@gmail.com

2ம் கட்டை, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

தொ.இல : 0094 024-2223683
T.P. : 0094 0776143628

2nd Mile Post, Mannar Rd,
Veppankulam, Vavuniya.

President
Miss.K.Jeyarany

Vice Presidents
Mr.K.Kirupagaran
Mrs.S.Rajini

Secretary
Mrs.S.Niranjana

Treasurer
Mr.M.Kathirkamarajah

Asst Secretary
Mr.G.Sriskantharajah

Asst Treasurer
Mrs.T.Rathimalar

Board of Members
Mr.S.Sabanathan
Mr.M.S.Selvarajah
Mr.T.KuruKulasingam
Mr.K.Uthayakumar
Mr.S.Santhirakumar
Mr.K.Kanesarajah
Mr.E.Tharmapalan
Mr.M.Jegan
Mr.S.Raveendran
Mrs.K.Santhiraleela
Mrs.J.Thadsayini
Mrs.S.Nirmala

Patron
Mr.V.S.Thevarajah
Mr.Dr.Ramachchandran
M.S.Subramaniyam

Bank / A/c / details
032020254291
Hatton National Bank
Vavuniya

Contact
024 222 3683
077 6143628

E Mail
hinduanpakam@gmail.com

2019.09.29

திரு வ.சிவராஜா,
ஜேர்மனி,

## நன்றி கூறல்

மேற்படி எமது இல்லச் சிறுமிகளான செல்வி க.கவிசா,செல்வி சி.பவிதா ஆகியோரின் பராமரிப்புச் செலவிற்காக தங்களின் மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை வாசகர்களால் ரூபா 72641.25 (எழுபத்து இரண்டாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஒரு ரூபா இருபத்தைந்து சதம்) நன்கொடையாக வழங்கியுள்ளீர்கள் இதற்கு நாங்களும் எமது இல்லச்சிறார்களும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் தங்களது பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்களை தெரித்துக்கொள்கின்றோம்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

R.Sureshanan

ௐ

# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண் பிள்ளைகள் இல்லம்

76(54), Vidyalayam Road,
Trincomalee,
Sri Lanka.
0262222521

76(54), வித்தியாலயம் வீதி,
திருகோணமலை,
இலங்கை
0262222521

Regd. No. NEP/PCC/C.H/31(1998.05.18)

Date: 2019.09.30

திரு. வ. சிவராசா,
பிரதம ஆசிரியர்,
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை.
ஜேர்மனி.

அன்புடையீர்,

ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்.

தங்கள் 2019.09.17ம் திகதியிடப்பட்ட கடிதம் 27.09.2019 இல் கிடைக்கப் பெற்றேன். நன்றி. செல்வி. வி. டக்சிகா இல்லத்தை விட்டு வீட்டிற்குச் சென்று தையல் பயிற்சி எடுத்து வருகின்றார். செல்வி. தி. தர்ஷி இல்லத்தை விட்டு வீட்டிற்குச் சென்று விட்டார். இவர்களுக்கு உதவி செய்த செல்வன். நகீஸ் துரைராசாங்கன் மற்றும் மண் சஞ்சிகை அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்பொழுது எமது இல்லத்தில் 18 பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றனர். இவர்களை கண்காணிப்பதற்கு நான்கு பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் 06ம் ஆண்டிலிருந்து 13ம் ஆண்டு வரை கல்வி கற்று வருகின்றனர்.

இவ் இல்லத்திலுள்ள பின்வரும் இரண்டு பிள்ளைகளுக்கு உதவி செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

01. யானுக்கா அஜித்குமார - 09ம் ஆண்டு (படம் 1)
02. துர்க்கா நல்லரெட்ணம் - 11ம் ஆண்டு (படம் 2)

இவ் இருவருக்கும் பெற்றோர் இல்லை. பாட்டியின் பாதுகாப்பில் உள்ளனர். நன்கு படிக்கக் கூடியவர்கள். இவர்களின் போட்டோ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

Miss. S. Chithiravel
Attorney-at-Law
Trustee

Miss. V. Nadarajah B.Sc
Manageress & Custodian Trustee

பிள்ளைகளின் சுகங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்ற எட்டுப் பிள்ளைகள். கொழும்பு பல்கலைக்கழகம் (வர்த்தகம் 3 A பெற்றோர்) பேராதனை பல்கலைக்கழகம் (கலை), யாழ் இராமநாதன் கலைக் கல்லூரி, கிழக்கு மாகாணம் - வந்தாறுமூலை பல்கலைக்கழகம் மற்றும் கோப்பாய், அட்டாளைச்சேனை போன்ற கல்வியியற் கல்லூரிகளிலும் கல்வி கற்று வருகின்றனர்.

இவ் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்ற மாணவர்கள் பலர் சிறந்த முறையில் உயர்தர கல்வியினை (பட்டப்படிப்பு) பெற்று அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகளைப் பெற்று தொழில் பார்த்து வருகின்றனர். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் சுமார் 40 க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தொழில் புரிந்து வருகின்றனர். சில பிள்ளைகள் திருமணம் செய்து வெளிநாட்டில் தங்கியிருக்கின்றனர்.

இறைவன் அருளால் முடிந்தவரை செயற்பட்டு வருகின்றோம். தற்பொழுது பல்கலைக்கழகத்திலும், கல்வியியற் கல்லூரியிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய நிலையிலுள்ளோம். சிலருக்கு உதவி செய்தும் வருகின்றோம். இவர்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்யுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். சுமார் 35 வருடங்களாக ஆண்டவன் அருளால் சேவை செய்து வருகின்றேன். இது எல்லாம் பூர்வீக கருமமாகும். இச்சேவை செய்வதற்கு அருளிய இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். தற்பொழுது எனக்கு 75 வயது. இவ் இல்லத்திற்கு அரசாங்க அலுவலராக 1977 ம் ஆண்டு வந்தேன். அன்றிலிருந்து இன்றுவரை இவ்விடத்தில் உள்ளேன். 1990 ம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றேன். நான் யாழ் மாவட்டத்தில் வடமராட்சியை பிறப்பிடமாகக் கொண்டவர். எமது திருகோணமலை 1971 ம் ஆண்டு தொடக்கம் ஆண் பிள்ளைகள் இல்லமும் நடைபெற்று வருகின்றது. இவர்களும் சிறந்த முறையில் கல்வி கற்று உயர்தர கல்வியை பெற்று வந்துள்ளனர், என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது அரசாங்கத்தின் புதிய கொள்கையால் இல்லத்திற்கு பிள்ளைகளை அனுமதிப்பது குறைக்கப்பட்டுள்ளது.

தாங்கள் யாவரும் நலமாக இருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்

நன்றி.

இவ்வண்ணம்.

MANAGERESS
Shanmuga Girls' Home
Road,

# யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்

நடத்தும்

மீராவின்

## பறவையாய் அவளை மாற்றிப் பார்ப்போமா?

## நூல் அறிமுகவிழா

வி.சபேசனின்
'துணை' குறுந்திரைப்படம் திரையிடல்



30.11.2019 சனிக்கிழமை
மாலை 14.00 மணி

மண்டபம்
Leopoldstraße 50 - 58
44147 Dortmund
Germany

மங்கள விளக்கேற்றல்
தலைமையுரை
நூல் ஆய்வுரை
வாழ்த்துரைகள்
சிறப்பு உரைகள்
குறுந்திரைப்படம் திரையிடல்
நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்பு இலக்கம்: 015233710575







மண் சஞ்சிகை வெளியாகும் டியூஸ்பேர் நகரில் வசித்தவரான அமரர் சின்னத்தம்பி கிருஸ்ணகுமார் அவர்களின் 31வது நாள் நினைவு தினம் 04.10.19 ஆகும். அன்றையதினம் அன்னாரின் மனைவி, பிள்ளைகளின் நிதி உதவியால் தலைமன்னாரிலுள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
Germany / Ausgabe 198






இலங்கை வடபகுதியில் காணமல் போனவர்களின் உறவுகள் போராட்டம்
1.000 வது நாட்களை நோக்கித் தொடர்கின்றது



07.10.2017 செல்வன் சுஜித் வில்சன் 29.10.2019
மணல்பாறை - தமிழ்நாடு
புதையுண்டு உயிர்துறந்த செல்வன் சுஜித்துக்கு எங்கள் அஞ்சலிகள்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |